திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
ஜூலை 2026,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:12, Pages:56
July-2026, Price Rs.20/-




அப்பளாயகுண்ட்டா
ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி
புஷ்ப யாக மஹோத்ஸவம்
30-07-2026



ஸுக$_2$து$_3$:கே$_2$ ஸமே க்ருத்வா
லாப$_4$ாலாபெ$_4$ள ஜயாஜயௌ।
ததோ யுத்$_3$த$_4$ாய யுஜ்யஸ்வ
நைவம் பாபமவாப்ஸ்யஸி॥

வெற்றி–தோல்விகளையும், லாப–நஷ்டங்களையும், சுக–துக்கங்களையும் சமமாகக் கருதி, அதற்குப் பின் யுத்தத்திற்குத் தயாராவாயாக. இவ்விதம் யுத்தம் செய்வதால் நீ பாவத்தை அடைய மாட்டாய்

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–38*

*உயிரு முடலு முடலாக வோங்கித்*
*தயிர்வெண்ணெய் தாரணியோ டுண்டான் – பயிரிற்*
*களைபோ லசுரரைக் காய்ந்தான்றன் கையில்*
*வளைபோலெம் மாசிரியர் வாக்கு*



சேதநமும் அசேதநமும் தனக்கு சரீரமாய் நிற்க, உயர்ந்து, தயிரையும் வெண்ணெயையும் பூமியோடு உண்டவனும், ஸாது ஜநங்களாகிய பயிருக்குக் களைபோன்ற அஸுரர்களை கொன்றவனுமான பகவானுடைய கையில் அணிந்திருக்கும் வளைபோல் அல்லது தரிக்கும் சங்கம்போல் எம்முடைய ஆசார்யர்களின் ஸூக்திகள் ப்ரகாசிக்கின்றன.

*– தத்துவ நவநீதம்*



திருச்சானூரில்...

# ஸ்ரீசுந்தர ராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆலயத்திற்குள் 1906 ஆம் ஆண்டு, ஹாதிராம்ஜி மடத்தின் அன்றைய மஹந்தான ஸ்ரீப்ரயாக் தாஸ்ஜி, உபய தேவியருடன் ஸ்ரீசுந்தர ராஜ ஸ்வாமியைத் ஸ்தாபித்தார். ஸ்ரீசுந்தர ராஜ ஸ்வாமி, ஸ்ரீமகா விஷ்ணுவின் ஓர் வடிவம் ஆவார். தேவர்களுள் மன்மதனைக் காட்டிலும் கோடி அழகுடைய சுந்தரனாய்த் திகழ்வதால், இப்பெயரால் போற்றப்படுகிறார்.



ஸ்ரீசுந்தர ராஜ ஸ்வாமியின் மூர்த்தி, ஜ்யேஷ்ட (ஆனி) மாத, சதயம் நட்சத்திர பௌர்ணமியன்று கண்டெடுக்கப்பட்டதால், 1906ஆம் ஆண்டு ஹாதி ராம்ஜி மடத்தின் மஹந்த் "அவதார உத்ஸவம்" என்னும் புதிய அனுஷ்டானத்தைத் துவங்கினர். 2006ஆம் ஆண்டு தி.தி.தே. "சுந்தர ராஜ ஸ்வாமி அவதார உத்ஸவத்தின்" சதாப்தி (100வது ஆண்டு) திருவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாடியது.

ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் "அவதார உத்ஸவம்" ஜ்யேஷ்ட (ஆனி) மாதத்தில் மூன்று நாட்களுக்கு நடைபெறும் உத்ஸவமாகும். இந்த உற்சவம் சதய நட்சத்திரத்தன்று தொடங்கி, உத்திரட்டாதி நட்சத்திரத்தில் நிறைவடையும். புராணத்தின்படி உத்திரட்டாதி ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் ஜன்ம திருநட்சத்திரமாகும்.

ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவத்தின் இந்த மூன்று நாட்களிலும் ஸ்வாமி மற்றும் தேவியர்களுக்கு கோயிலின் முக மண்டபத்தில் ஸ்நபன திருமஞ்சனம் நடைபெறும். பின்பு மாலையில் மெய்மறக்கச் செய்யும் "ஊஞ்சல் சேவையும்" நடைபெறும். அப்போது உபய நாச்சிமார்களோடு எம்பெருமானை ஊஞ்சலில் எழந்தருளச் செய்து, மெதுவாக ஊஞ்சலை அசைக்க, கலைஞர்கள் தேவியர் மற்றும் எம்பெருமானின் மகிமையைப் பற்றி பாடுவார்கள்.

உத்ஸவத்தின் முதல் நாளன்று, ஸ்ரீசுந்தர ராஜ ஸ்வாமி பெரிய சேஷ வாகனத்தில் எழுந்தருளி, திருச்சானூரின் நான்கு மாட வீதிகளில் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு தரிசனம் தருவார். இரண்டாம் நாள் ஹனுமத் வாகனத்திலும், மூன்றாம் நாள் எம்பெருமான் பெரிய திருவடியான கருட வாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜுலை 2026 மலர் 05 இதழ் 12





சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்.

பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363


நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| ஆனந்த வாழ்வளிக்கும் ஆடிப்பூரம் - முனைவர் அருணா சங்கரவேலாயுதம், திருநெல்வேலி. | 7 |
| கூர்ம அவதாரமும் திருமலையப்பனும் -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: வில் ஏந்தும் வேலவன் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 13 |
| குருவே பரபிரம்மம் -திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. | 15 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: பூரிசிரவஸு என்னும் மாவீரன் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 17 |
| ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 20 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 24 |
| திருவேங்கடவனின் திருவருள் -திருமதி ஆர்.வி.கீதா, சிதம்பரம். | 26 |
| திருக்கோவலூர் திருத்தலம் | 31 |
| 108 திவ்யதேச வைபவம் : திருச்சாளக்கிராமம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 32 |
| நாரதர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசௌம்யநாதர் – நந்தலூர் - திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், கல்லிடைக்குறிச்சி. | 35 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: ஸ்ரீபராங்குச நம்பி -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை. | 38 |
| சீலம் எல்லை இலான் - பெருமாள் கோவில் திருமலை விஞ்சமூர் ஆராவமுதன், திருவல்லிக்கேணி. | 41 |
| ராசிபலன்கள் : ஜுலை 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 44 |
| ஆரோக்கியம் காப்போம்: மனதின் ஆரோக்கியம் மணம் தருமா? -ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை. | 45 |
| நீதிக்கதை : இறை நம்பிக்கையே வெற்றி தரும் -திரு. அசோக்ராஜா, அரவக்குறிச்சிபட்டி. | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : குரு தட்சணை | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஆஸ்தானத்தில் விஷ்வக்சேனர், உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரையை முன்னிட்டு ஸ்ரீகிருஷ்ணர், பலராமர் மற்றும் சுபத்ரை.



# நல்ல குருவே வாழ்க்கையின் நல்வழிகாட்டி

நமது பாரத தேசத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தில் பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையிலான உறவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ அதே அளவு முக்கியத்துவம் குருவுக்கும் சீடர்களுக்கும் இடையிலான உறவுக்கும் உண்டு. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து அதனை நல்ல உடல் நலத்துடன் வளர்ப்பவர்கள் பெற்றோர்கள். ஆனால் அக்குழந்தையானது தான் வாழும் சமுதாயத்திற்குப் பயன்படும்படியான மன நலம், குண நலம், அறிவு நலம் ஆகியவற்றைப் பெற வைப்பவர் குருவே ஆவார். இதன் காரணமாகவே பண்டைய காலங்களில் கல்வியறிவு பெற வேண்டிய வயதை எட்டிய குழந்தைகள் குருகுலவாசம் செய்ய அனுப்பப்பட்டனர்.

குருகுலவாசம் செய்யும் மாணாக்கர்கள் தங்களுக்குக் கல்வியறிவு புகட்டும் குருவையும், குருபத்தினியையும் தம்முடைய பெற்றோருக்கு இணையாக மதித்து நடந்து கொள்வர். மேலும், குருவின் இல்லத்தில் வழங்கப்படும் எளிமையான சத்துள்ள உணவை உட்கொண்டும், அவர்களுக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்து கொண்டும் வாழ்ந்ததால் பணிவும், தன்னலமும் கருதாத உழைப்பையும் கொண்ட உன்னதமான குடிமக்களாக வளர்த்தெடுக்கப் பட்டனர். ஒரு நாட்டின் இளவரசனாக இருந்தாலும் சரி, சாதாரண குடிமகனுடைய குழந்தையானாலும் சரி, அவர்கள் அனைவரும் குருகுலத்தில் சரிசமமாகவே நடத்தப்பட்டனர். சாந்தீபனி முனிவரின் ஆசிரமத்தில் ஸ்ரீபலராமன், ஸ்ரீகிருஷ்ணர் இருவருடன் பரம ஏழைக் குடும்பத்திலிருந்து வந்த குசேலரும் குருகுலவாசம் செய்ததை பாகவதம் எடுத்துக்கூறுகின்றது.

பண்டையக்காலத்தில் தனிமனித ஒழுக்கம், அறநெறி உணர்வு ஆகியவற்றுடன் கூடிய ஏட்டறிவைப் பெறுவதே அனைவரின் நோக்கமாக இருந்தது. அந்நோக்கத்தை அடைவதற்கு குருகுல வாசம் பெருமளவு உதவி செய்தது. மக்கள் தொகைப் பெருக்கம் உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில நூற்றாண்டுகளில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை பல்கிப்பெருகின. ஆயினும் கூட, இருபதாம் நூற்றாண்டின் பெரும்பகுதி வரையிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையிலான உறவின் புனிதத்தன்மை பெருமளவு பாதுகாக்கப்பட்டது. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் முதல் கல்லூரிப்பேராசிரியர்கள் வரையிலான ஆசிரியப்பெருமக்கள் தங்களுடைய மாணாக்கர்களால் மதிப்புடன் நடத்தப்பட்டனர். பணிவும் தன்னடக்கமும் இளைஞர்களுக்குரிய முக்கிய குணநலன்களாகவே பார்க்கப்பட்டன.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தறிகெட்டுப் பெருகிய நுகர்வுக்கலாசாரம், தகவல் தொழிநுட்ப மேம்பாடு ஆகியவை நமது சமுதாயத்தின் போக்கில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது கண்கூடு. மாணவச் செல்வங்களிடத்திலிருந்து பணிவு, தன்னடக்கம் போன்ற குணநலன்கள் ஒவ்வொன்றாக விடைபெறத் தொடங்கி உள்ளன. கல்விக்கூடங்களில் பணிவும், அடக்கமும் இல்லாத காரணத்தால் பொதுவெளிகளிலும் மாணவர்கள் நடந்து கொள்ளும் முறையில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. மாணவப் பருவத்தினர் தத்தம் குடும்பத்திலும், பொதுவெளியிலும் மூத்தவர்களிடம் மரியாதையுடன் பழகுவது பெருமளவு குறைந்திருக்கின்றது.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு நாம் எதிர்கொண்ட கொரோனா பேரிடர் காரணமாக நேரடியாகக் கல்வி நிலையங்களுக்குச் சென்று ஆசிரியர்களிடமிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வது தடைப்பட்டு, கணினி, கைப்பேசி ஆகியவற்றின் வாயிலாகக் கல்வி கற்க வேண்டிய சூழலானது குருசீடன் உறவில் மேலும் சிறிது பாதிப்பை ஏற்படுத்தியது. இன்றைய மாணவச் செல்வங்களே நம் நாட்டின் எதிர்காலப் பெருமைகளுக்குக் காரணமாக விளங்க வேண்டியவர் களாவர். சாதாரணப் பணியாளர் முதல், இந்த நாட்டையே ஆளுகின்ற ஆட்சியாளர்களாக மலரக் கூடிய இன்றைய மாணவச் சமுதாயத்தினரின் குணநலன்களும், திறமைகளும் மேம்பட வேண்டுமெனில், ஆசிரியச் சமுதாயத்தினரின் மேலான வழிகாட்டுதலும், கண்காணிப்பும் மிகவும் இன்றியமையாததாகிறது.

பண்டையக் காலங்களில் இருந்ததைப் போன்ற புனிதமான குரு – சீடன் உறவு மீண்டும் இங்கு மலர்ந்திட வேண்டும் எனில் சனாதன தர்மம் தழைக்க வேண்டும். நம் நாட்டின் கல்வியாளர்கள் அனைவரும் இதற்கான முயற்சிகளில் காலம் தாழ்த்தாமல் ஈடுபடவேண்டியது மிகவும் அவசியமாகும்.

# ஆனந்த வாழ்வளிக்கும் ஆடிப்பூரம்



- முனைவர் அருணா சங்கரவேலாயுதம், திருநெல்வேலி, 9944996616.

ஆன்மீகமும், பக்தியும் வாழ்க்கையை வளப் படுத்திக் கொள்வதற்காகவே ஏற்பட்டவை. இறைவனை யும், இறைத் தன்மையையும் போற்றும் மக்களுக்கு தங்கள் நம்பிக்கையை வலுப்படுத்த விழாக்களும், பண்டிகைகளும் கருவிகளாக விளங்குகின்றன.

ஆடிப்பூரம் தமிழர் ஆன்மீக வாழ்க்கையில், பாரம் பரியத்தில் முக்கியமான இடம் பெறும் பண்டிகையாகும். ஆடிப்பூரம் என்னும் விழா ஆடித் திங்களில் பூர நட்சத்திர நன்னாளில் கொண்டாடப்படும் திருவிழாவாகும். இது தேவிக்குரிய திருநாள் ஆகும். உலக மக்களைக் காப்பதற் காக அம்பாள் சக்தியாக உருவெடுத்த தினமே ஆடிப்பூரம். ஆடிப்பூரம் சைவ, வைணவ ஆலயங்களில் வெகு சிறப் பாகக் கொண்டாடப்படுகிறது. ஆடிப்பூரம் என்றாலே ஆண்டாள் நாச்சியார் தான் நினைவுக்கு வருகிறார்.

*இன்றோ திருவாடிப்பூரம் - எமக்காக*
*வன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்*
*குன்றாத வாழ்வான வைகுந்த வான் போகம்*
*தன்னை இகழ்ந்து ஆழ்வார் திருமகளாராய்!*

என்று திருவாடிப்பூரத்திருநாளைக் குறித்து உபதேச ரத்தின மாலையில் மணவாள மாமுனிகள் போற்றிப் பாடியுள்ளார்.

உயர்ந்த ஆடிமாதத்தில், பூர நட்சத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில், துளசி வனத்தில், பெரியாழ்வா ரின் திருமகளாய் கோதா என்ற திருநாமத்துடன் அவதாரம் செய்கிறாள். சாட்சாத் பூமா தேவியே வைகுண்ட வான்போகம் வேண்டாம் என வெறுத்து, பூலோகத்திலுள்ள மக்களை காப்பாற்ற ஒரு தாயின் கருணை உள்ளத்தோடு பூமியில் அவதரித்தாள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் ஆண்டாள் நாச்சியாரின் ஜனன உற்சவமாகிய திருவாடிப்பூர பிரம்மோற்சவம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஒன்பதாம் திருநாளான ஆடிப் பூரத்தன்று ஆண்டாளும், ரங்க மன்னாரும் பெரிய திருத்தேரில் பவனி வருகிறார்கள். தமிழகத்திலுள்ள மிக உயர்ந்த தேர்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மதுரையில் கூடலழகர் கோயிலில் திருவாடிப்பூரம் மாலைமாற்று விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அங்கு மஞ்சள், குங்குமம், வளையல்கள், தாலிச்சரடு போன்ற மங் கலப் பொருட்கள் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. வைண வத் திருத்தலங்களில் திருவாடிப்பூரத் திருவிழா ஆண்டாளின் அவதாரத்தினமாக சீரும், சிறப்புமாகக் கொண்டாடப்படுகிறது.

## ஆடிப்பூர விழாவின் மகிமைகள்

ஆடிப்பூர விழா சைவ ஆலயங்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சித்தர்களும், முனிவர்களும் இந்த நாளில்தான் தங்கள் தவத்தைத் தொடங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆடிமாதம் தட்சிணாயன காலத்தின் தொடக்கம். அம்பிகைக்கு உரிய காலம்.

*பூத்தவளே புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்*
*காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு*
*மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே*
*மாத்தவளே உன்னையன்றி மற்று ஓர்தெய்வம்*
*வந்திப்பதே*

– அபிராமி அந்தாதி 13

என்று "மூவா முகுந்தற்கு இளையவள்"– "திருமாலைப் போல் நிரந்தரமானவள்" என்று அபிராமி பட்டர் பாடுகிறார். "புவி ஏழையும் பூத்தவளே" என்கிறார். ஏழுலகங்களையும் படைத்து, காத்து வருபவள் ஆதிபரம்பொருளான பராசக்தி. உலகத்தைப் படைத்து, காத்து, இரட்சித்து அருள்புரியும் அன்னையை வழிபடும் நாளே ஆடிப்பூர நன்னாளாகும்.

## ஆடிப்பூர வழிபாடுகள்

பக்தி ஆற்றல் மிக்கது. அபாரமானது. அது அன்பாகவும், பண்பாகவும், மனிதநேயமாகவும், பிற உயிர்கள் மீது கொள்ளும் பரிவாகவும் வடிவெடுக்கிறது. வழிபாடுகளாக உருவெடுக்கிறது. அவ்வாறே மக்கள் ஆடிப்பூரத்தன்று பல்வேறு வகையான வழிபாடுகள் மூலம் தங்கள் பக்தியை வெளிப்படுத்துகின்றனர்.

*சொல்லுந் தனையும் தொழுமின், விழும் உடம்பு*
*செல்லுந் தனையும் திருமாலை - நல் இதழ்த்*
*தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்*
*நாமத்தால் ஏத்து திரேல் நன்று*

– முதல் திருவந்தாதி 70

என்ற பொய்கையாழ்வார் பாடலைச் செயல் வழிச் செய்யும் வழிபாட்டிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## முளைக் கொட்டுத் திருவிழா

ஆண்டுதோறும் ஆடிமாத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பத்து நாட்கள் கொடியேற்றத்துடன் சிறப்பான விழாவாக நடைபெறுகிறது. ஆடிப்பூரத்தன்று சிறப்பு மஞ்சள் நீராடல் நடைபெற்று, ஏற்றி இறக்கும் சடங்கும் நடைபெறகிறது. ஆடிப்பூர நன்னாளில் அங்கயற்கண்ணி மீனாட்சி பூப்படைந்ததாகக் கருதி இந்தச் சடங்கு கண்ணேறு கழிப்பதற்காக நடத்தப் படுவதாகக் கூறப்படுகிறது. மதுரையில் உள்ள மற்ற கோயில்களில், ஆடிப்பூரத்தன்று முறத்தில் வெற்றிலை, பாக்குடன் மங்கலப் பொருட்கள் வைத்து அம்பாளுக்குச் சமர்ப்பித்து வழிபடுவர்.

## வளைகாப்புத் திருவிழா:

*ஆடிப்பூரநாயகிக்கு - சந்தனக்காப்பு*
*அகிலாண்ட அன்னைக்கு - கை வளைகாப்பு*

என்று அனைத்து அம்மன் கோயில்களிலும் அம்மனுக்கு வளைகாப்பு விழா நடத்துவார்கள். குறிப்பாக திருநெல்வேலி காந்திமதி அம்மன் நெல்லையப்பர் கோயிலில் ஆடிப்பூரத்திருவிழா காந்திமதி அம்மனின் வளைகாப்புத் திருவிழாவாகக் கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து நாட்கள் நடைபெறும். அம்மனுக்கு மடி நிறைத்து, சீமந்தம் போலவே, சித்ரான்னங்கள், பலகாரங்கள், முளைப்பயறு போன்றவற்றைப் படைத்து, வளையல்கள் சூட்டி தங்கள் வீட்டுப் பெண்ணுக்கு சீமந்தம் நடத்துவது போல இந்த ஆடிப்பூர வளைகாப்புத் திருவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடுவர்.

*அம்பா பராசக்தி ஈஸ்வரியே - இந்த*
*அண்ட சராசர ரட்சகியே*
*உந்தன் செம்பொன் திருத்தாளை*
*நற்றுணையாய் நம்பி*
*செய்கின்றோம் அம்மா வளைகாப்பு*

என்று பாடி கும்மி, கோலாட்டங்களுடன் வழிபடுவர்.

*முன்னின்று நீ காக்க வேண்டும் - என்று வேண்டி*
*முதலில் இட்டோம் வேப்பங்காப்பு*
*பொன் காப்பு, வெள்ளியில் புதுக்காப்பு*
*அதன் பின் வண்ண வண்ண வளைகாப்பு*

என்ற கும்மி பாடல் பாடி மக்கட்பேறு வேண்டி, வருகை தரும் பெண்களுக்கு வகை வகையான கண்ணாடி வளையல்களை விநியோகம் செய்வர்.

## அம்மன் கோயில்களில் ஆடிப்பூரம்

ஆடிப்பூர நன்னாளில், சமயபுரம் மாரியம்மன் கண்டருளும் தீர்த்தவாரியும், புன்னைநல்லூர் மாரியம்மனின் முத்துப்பல்லக்

## திருமலையில் ஆனிவர ஆஸ்தானத்தில்...

திருமலையில் "ஆனிவர ஆஸ்தானம்" அதாவது தமிழில் ஆடித்திருவிழா மிகவும் சிறப்பானதாகும். அன்று காலை தோமாலை சேவை முடிந்தவுடன் ஸ்ரீதேவி பூதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமிக்கும், விஷ்வக்சேனருக்கும் கோயிலில் ஏகாந்தமாக திருமஞ்சனம் நடைபெறும். பிறகு தங்க வாயில் அருகில் உள்ள திருமாமணி (மணிமண்டபம்) மண்டபத்தில் சர்வபூபால வாகனத்தில் உபய நாச்சியருடன் திருமலையப்ப ஸ்வாமியை கருடாழ்வார் சந்நிதிக்கு எதிரே கொலுவில் சர்வாபரணங்களாலும், சுகந்த பரிமளமான புஷ்பங்களாலும் அலங்கரிப்பர். திருமலையப்ப ஸ்வாமிக்கு அருகில் தெற்கு முகமாக ஸ்ரீவிஷ்வக்சேனரையும் எழுந்தருளப் பண்ணி ஆபரணங்கள், புஷ்ப மாலைகளால் அலங்கரிப்பர்.

பிறகு ஆனந்த நிலையத்தில் உள்ள மூல மூர்த்திக்கும், தங்க வாயில் அருகில் ஆஸ்தானத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும், சேனாபதிக்கும் சிறப்பு பிரசாதங்களால் நைவேத்தியம் சமர்ப்பிப்பர்.



ஜீயர் ஸ்வாமிகள், பெரிய வெள்ளித் தட்டில் பட்டு வஸ்த்திரங்களைச் சுமந்து வந்து மூலமூர்த்திக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் சமர்ப்பிப்பார். அன்றைய மாலை வேளையில் உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமியும் நான்கு திருமாட வீதிகளில் புஷ்ப பல்லக்கில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிவார்.

ஸ்வாமிக்கு இப்புண்ணிய காலத்தில் யாரொருவர் விசேஷ பூஜை செய்கிறார்களோ அவர்களுக்கு புகழ், வெற்றி, கார்யசித்தி, விஷ்ணு லோகப்ராப்தி பெறுவர் என ஆகம சாஸ்திரம் கூறுகிறது.

கும், காஞ்சிபுரம் ஆதி காமாட்சியின் லட்சதீபமும் பிரசித்தி பெற்றவை. அன்று காமாட்சி அம்மனும் வளையல் அலங்காரத்தில் காட்சி அளிப்பாள்.

ஆடிப்பூரத்தன்று சங்கரன்கோவிலில் மாவிளக்கு வழிபாடு செய்வதும், சிவகங்கை மாவட்டம் மடப்புரம் ஸ்ரீபத்ரகாளி அம்மனுக்கு பால்குடம் எடுத்து வந்து வழிபாடு செய்வதும் வெகு சிறப்பானதாகக் கருதப்பட்டு வருகிறது.

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் கூழ் ஊற்று தல் மற்றும் அன்னதானம் நடைபெறும். பல ஆலயங் களில் பூச்சொரிதல் நடைபெறும். முளைப்பாரி எடுத்து வழிபடுவதும் உண்டு.

தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கும் அன்னை பராசக்திக்கும் ஆண்டாள் நாச்சியாருக்கும் ஆடிப்பூரவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கேரளாவின் திருச்சூரிலுள்ள வடக்கு நாதர் கோயிலில், மலையாள நாட்காட்டிபடி பூரம் நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும் திருச்சூர் பூரம் விழா மிகவும் பிரம்மாண்டமான திருவிழாவாகும். அன்று வான வேடிக்கைகளுடன் பொன்னால் அலங்கரிக்கப் பட்ட யானைகளின் அணி வகுப்பும் நடைபெறும். திருச்சூர் பூரவிழா "பூரங்களின் தாய்" என்று அழைக்கப்படுகிறது.

ஆந்திராவில் அமைந்துள்ள வைணவ ஆலயங்களிலும், குறிப்பாக தெலுங்கானா மாநிலம் அதிலாபாத்தில் அமைந்துள்ள ரங்கநாதர் சமேத கோதாதேவி ஆலயத்திலும் திருவாடிப்பூரம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

*"திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே..."*

என்று ஆண்டாள் நாச்சியாரை வாழ்த்தி வணங்கினால் நினைத்த காரியங்கள் கைகூடும். கல்வி, செல்வம், ஆயுள், ஆரோக்கியம், மணப்பேறு, மக்கட் செல்வம் போன்ற சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

ஜூலை மாதம் என்பது, ஆனி மாதத்தின் பிற்பகுதியும், ஆடி மாதத்தின் முற்பகுதியும் கலந்து வரும் மாதம். இம்மாதத்திற்கு ஆஷாட மாதம் என்று பெயர்.

இம்மாதத்தில் பல்வேறு விரதங்களும் உற்சவங்களும் வருகின்றன. தக்ஷிணாயன புண்ணிய காலமாகிய ஆடிப்பண்டிகை இந்த மாதத்தில் தான் வருகிறது. வியாச பூஜையும், சாதுர் மாஸ்ய விரதமும் இந்த மாதத்தில்தான் வருகின்றன. இத்தனைச் சிறப்புடைய இம்மாதத்தில் பகவானின் கூர்ம ஜெயந்தி வைபவமும் ஏகாதசியை அடுத்த துவாதசியில் 11.7.2026 சனிக்கிழமை வருகிறது.

பகவான் எடுத்த கூர்ம அவதாரத்திற்கும், திருமலை அப்பனுக்கும் உள்ள சம்பந்தத்தை இந்தக் கட்டுரையின் மூலம் அநுபவிப்போம். அதற்கு முன் பகவான் ஏன் அவதாரங்களை எடுத்தார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பகவான் (இறைவன்) பூமியில் அவதாரங்கள் எடுப்பதற்கான காரணங்களை ஸ்ரீமத்பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மாவே மிகத் தெளிவாகக் கூறி உள்ளார்.

பகவத் கீதையின் 4-வது அத்தியாயத்தில் வரும் புகழ்பெற்ற சுலோகம் இது:

யதா யதா ஹி தர்மஸ்ய
க்லானிர்பவதி பாரத
அப்யுத்தானமதர்மஸ்ய
ததாத்மானம்
ஸ்ருஜாம்யஹம் |
*பரித்ராணாய சாதூனாம்*
*விநாசாய ச துஷ்க்ருதாம்*
*தர்மஸம்ஸ்தாபனார்த்தாய*
*ஸம்பவாமி யுகே யுகே ||*

இச்சுலோகத்தின் அடிப்படையில், இறைவன் அவதாரம் எடுப்பதற்கான மூன்று முக்கிய காரணங்கள் உண்டு.

# கூர்ம அவதாரமும் திருமலையப்பனும்



**1. தர்மத்தை நிலைநாட்ட (தர்ம ஸம்ஸ்தாபனம்):** உலகில் எப்போதெல்லாம் அறநெறி (தர்மம்) குறைந்து, மறநெறி (அதர்மம்) தலைதூக்குகிறதோ, அப்போதெல்லாம் தர்மத்தை மீண்டும் நிலைநிறுத்த இறைவன் அவதரிக்கிறார். மனிதர்கள் வாழ வேண்டிய நல்வழியைக் காட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**2. நல்லவர்களைக் காக்க (பரித்ராணாய சாதூனாம்) :** இறைவனை மட்டுமே நம்பி வாழும் சாதுக்கள், முனிவர்கள் மற்றும் நல்லவர்களை தீயவர்களின் பிடியிலிருந்தும், துயரங்களில் இருந்தும் காப்பது இறைவனின் கடமையாகும்.

**3. தீயவர்களை அழிக்க (விநாசாய ச துஷ்க்ருதாம்) :** பூமிக்கும், மனிதர்களுக்கும், நல்லவர்களுக்கும் துன்பம் விளைவிக்கும் அரக்கர்களையும், தீய சக்திகளையும் அழித்து உலகிற்கு அமைதியை வழங்க இறைவன் அவதாரம் எடுக்கிறார். இந்த காரணங்கள் தவிர பிற முக்கிய காரணங்களும் உண்டு.

**பக்தர்களின் அன்பிற்கு கட்டுப்படுதல்:** தீவிர பக்தர்களின் வேண்டுதலுக்கு இணங்கி, அவர்களுக்கு நேரில் காட்சி தந்து அருள இறைவன் பூமியில் மனிதனாகவோ அல்லது பிற வடிவங்களிலோ அவதரிக்கிறார்.

**வாழ்வியல் நெறிகளை கற்றுக் கொடுக்க:** மனிதனாகப் பிறந்தால் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாகத்

திகழ (முக்கியமாக இராம அவதாரம்) இறைவன் அவதரிக்கிறார்.

*நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்*
*இடை நிகழ்ந்தது இராமாவ தாரப்பேர்த்*
*தொடை நிரம்பிய தோமறு மாக்கதை*
*சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே*

என்ற பாடலில் இராமனை *"நடையின் நின்றுயர் நாயகன்"* என்கிறார் கம்பன். நம்மாழ்வாரும் *"கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ"* என்று பாடினார்.

சுருக்கமாகச் சொன்னால், தீமையை அழித்து, நன்மையைக் காத்து, உலகில் தர்மத்தையும் அமைதியையும் நிலைநிறுத்தவே பகவான் மீண்டும் மீண்டும் அவதாரங்களை எடுக்கிறார். பல அவதாரங்கள் எடுத்தாலும் தசாவதாரங்களே பிரதானம். இதை பெரியாழ்வார்

*தேவுடைய மீனமாய் ஆமையாய்*
*ஏனமாய் அரியாய்க் குறளாய் மூவுருவி*
*ராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய்*
*முடிப்பாங் கோயில் சேவலொடு*
*பெடையன்னம் செங்கமல மலரேறி*
*ஊச லாடி பூவணைமேல் துதைந்தெழுசெம்*
*பொடியாடி விளையாடும் புனல ரங்கமே.*

என்று பாடுகிறார்.

அரங்கன் 10 அவதாரங்களை எடுத்ததாக பெரியாழ்வார் இந்தப் பாசுரத்தில் பாடினாலும், அந்த அரங்கன் திருவரங்கம் வந்து சேர்வதற்கு முன் வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பாக நின்ற இடம் திருமலை அல்லவா! எனவே திருமலை அப்பனுக்கு இந்தப் பத்து அவதாரங்களும் பொருந்தும்.

பகவான் எடுத்த தசாவதாரங்களில் 2வது அவதாரம் கூர்ம அவதாரம். மற்ற அவதாரங்கள் பெரும்பாலும் தீயவர்களை அழிப்பதற்காக எடுக்கப் பட்டவை. ஆனால், கூர்ம அவதாரம் மட்டுமே உலக நன்மைக்காகவும், தேவர்களுக்கு உதவவும், பொறுமையின் சிகரமாகவும் எடுக்கப்பட்ட ஒரு தனிச்சிறப்பு மிக்க அவதாரமாகும்.

துர்வாச முனிவரின் சாபத்தால் தேவர்கள் தங்கள் வலிமையையும் செல்வத்தையும் இழந்தனர்.



**பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் ஒன்று சேர்ந்து கடைந்தபோது உலகிற்குத் தேவை யான பல உன்னதமான பொருட்கள் வெளி வந்தன. அவை அனைத்திற்கும் ஆதாரமாக இருந்தது கூர்ம அவதாரமே ஆகும்.**

பாற்கடலில் இருந்து வெளிவந்தவை:

**மகாலட்சுமி (செல்வத்தின் அதிபதி – விஷ்ணுவின் மார்பில் அமர்ந்தார்), தன்வந்திரி பகவான் (மருத்துவத்தின் கடவுள் – அமுத கலசத் துடன் வந்தார்), காமதேனு (கேட்டதைத் தரும் பசு), கற்பக விருட்சம் (தேவலோக மரம்), ஐராவதம் (இந்திரனின் வெள்ளை யானை), உச்சைச்சிரவஸ் (ஏழு தலை குதிரை) என எண்ணற்றவை வெளியே வந்தன. பாற்கடலில் இருந்து முதலில் வெளிவந்த "ஹாலாஹல" விஷத்தை உலகைக் காப்பதற்காக சிவபெருமான் பருகி "நீலகண்டன்" ஆனார்.**

இழந்த பெருமைகளை மீட்க, அசுரர்களின் உதவி யுடன் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்க முடிவு செய்தனர். அதற்காக மந்தர மலை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பு கயிறாகவும் பயன்படுத்தப் பட்டது. பகவான் விஷ்ணு ஒரு பிரம்மாண்டமான ஆமை (கூர்மம்) வடிவெடுத்து, கடலின் அடிவாரத் திற்குச் சென்று, அந்த மலையைத் தன் முதுகில் தாங்கி நிறுத்தினார்.

இந்த அவதாரத்தின் வாழ்வியல் தத்துவங் களை இப்படிப் பார்க்கலாம்.

மனித உடலையும், ஆன்மீகத்தையும் கூர்ம அவதாரத்தோடு ஒப்பிடலாம். நம் மனம் தான் பாற்கடல். அதில் நல்ல எண்ணங்கள் (தேவர்கள்)

கலியுகத்தில் நாம ஸ்மரணை செய்வதே முக்தி அடைவதற்கான வழியாகும். "குறைவொன்றும் இல்லாத கோவிந்தா.." என்ற கூற்றின்படி "கோவிந்தா" என்ற பெயரைக் கூறினால் கோடி புண்ணியம். திருமலையில்



கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.

**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

மற்றும் தீய எண்ணங்கள் (அசுரர்கள்) எப்போதும் போராடிக் கொண்டே இருக்கின்றன. நமது பக்தி மற்றும் ஆன்மீக விழிப்புணர்வுதான் மந்தர மலை. ஆமை ஆபத்து வரும்போது தன் உறுப்புகளை ஓட்டிற்குள் சுருக்கிக் கொள்வது போல, மனிதனும் தன் ஐம்புலன்களையும் அடக்கி, இறைவனைத் தன் மனதில் (முதுகில் தாங்குவது போல்) உறுதியாக நிறுத்தினால், வாழ்வில் "அமிர்தம்" போன்ற பேரின்பத்தை அடையலாம் என்பதே இதன் தத்துவம்.

இனி, திருமலைக்கும், திருமலை அப்பனுக்கும், கூர்ம அவதாரத்திற்கும் உள்ள சில அதிசயத்தக்க ஒற்றுமைகளை அனுபவிப்போம். திருப்பதி ஏழுமலையான் கோயில் அமைந்து உள்ள திருமலை மலைத் தொடரில், இயற்கையாகவே பாறைகளால் உருவான ஒரு பெரிய வளைவு உள்ளது. புவியியல் ரீதியாக பழமையான இந்தப் பாறை அமைப்பு, ஒரு ஆமையின் தலை மற்றும் ஓடு போன்ற வடிவத்தைக் கொண்டு உள்ளது. திருப்பதி மலைத்தொடர் வராக அவதாரத்துடன் தொடர்புடையது. அதே சமயம், திருமலையில் பெருமாள் கூர்ம அவதார வடிவில் அருள்பாலிப்பதாகவும் பக்தர்கள் நம்புகின்றனர்.

தேவர்கள் வாழ்வு என்பது, மக்களின் வாழ்வோடு இணைந்தது. வருணன், சூரியன், சோமன், அக்னி முதலிய தேவர்களால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் தேவர்களுக்கு உதவுவதற்காகத்தான், எம்பெருமான் பாற்கடலைக் கடைவதற்கு ஆதாரமாக நின்றார். அதைப்போல இந்த உலக மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காகவே, நூற் கடல் ஆகிய வேதங்களைத் தாங்கிக் கொண்டு, எம்பெருமான் திருமலையில் காட்சி தந்து கொண்டிருக்கிறார். பாற்கடல் கடைந்த பொழுது, தேவர்களுக்கு அமுதம் கிடைத்தது. அந்த அமுதத்தைத் தந்த ஆரா அமுதம் தான் திருமலையப்பன்.

பெரியாழ்வார் நிறைவாக திருமலையப்பனிடம் சரண் அடைந்து பாடுகின்ற *'சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்'* பதிகத்தில்,

*கடல் கடைந்து அமுதம் கொண்டு*
*கலசத்தை நிறைத்தாற்போல்*
*உடல் உருகி வாய் திறந்து மடுத்து*
*உன்னை நிறைத்துக்கொண்டேன்*

என்று எம்பெருமானாகிய அமுதத்தை தான் நிறைத்துக் கொண்ட விஷயத்தைப் பாடுகின்றார்

*''உலகம் உண்ட பெருவாயா''* திருவாய் மொழியில், *''எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே, இமையோர் அதிபதியே''* என்று நம்மாழ்வார் பாடுகின்றார்.

திருமங்கையாழ்வார்,

*சீரார் திருவேங்கட மாமலை மேய*
*ஆரா அமுதே அடியேற்க ருளாயே என்று*

"பாற்கடல் கடைந்த பொழுது தேவர்களுக்கு அமுதம் கிடைத்தது போல நமக்கு அமுதமாகிய பெருமாள் கிடைத்தார்'' என்று பாடுகின்றார். பாற்கடல் கடைந்த பொழுது, மகாலட்சுமித் தாயார் தோன்றி எம்பெருமான் திருமார்பில் அமர்ந்து கொண்டார்.

மகாலட்சுமித் தாயார் தான் அலர் மேல் மங்கைத் தாயார். திருமலையப்பனின் திருமார்பில் நித்ய வாசம் செய்பவள் என்பதால் பெருமானுக்கு "திருவேங்கடத்தான்" என்று திருநாமம். இதை தன்னுடைய சரணாகதி பாசுரத்தில், *''அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறை மார்பா...''* என்று நம்மாழ்வார் பாடுகின்றார். இப்படி பலப் பலவாக, கூர்மாவதாரத்தோடு இணைத்து நாம் காட்ட முடியும்.

இந்த கூர்ம ஜெயந்தியின் போது, கூர்ம அவதாரத்தின் பெருமைகளை நினைத்துக் கொண்டே திருமலையப்பன் திருவடிவாரத்தில் சரண் புகுவோம்.

**- பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963**



சிந்தை
மயக்கும்
விந்தை
கற்சிற்பங்கள்



# வில் ஏந்தும் வேலவன்

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 9443171383.

சங்க காலத்தில் மலையும், மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் என அழைக்கப்பட்டது. இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் வேல் எனும் ஈட்டி மற்றும் வில், அம்பு கொண்டு விலங்குகளை வேட்டையாடும் தொழில் புரிந்து வந்தனர். ஆத லால் இவர்கள் வேட்டுவர் என அழைக்கப்பட்டனர்.

63 நாயன்மார்களில் ஒருவரான கண்ணப்ப நாயனார் வேட்டுவர் இனத்தவர் என்பது குறிப் பிடத்தக்கது. இம்மக்கள் வழிபட்ட மிக தொன்மை யான தெய்வம் வேல் மற்றும் வில், அம்பு ஏந்தி அருளும் ஸ்ரீமுருகப்பெருமான் ஆவார்.

குன்றிருக்கும் இடமெல்லாம் குடி கொண்டு இருக்கும் குறிஞ்சி நிலக் கடவுளான குமரப் பெருமான், தேவர்களின் குலம் காக்க சிவ பெருமா னின் ஒளிச்சுடரில் ஒளிர்ந்த திருமகன் ஆவார்.

இவர் சூரனை வதம் செய்ய அன்னை மகா சக்தி தந்தருளிய சக்திவேலுடன் எழுந்தருளியுள்ள வடிவங்கள் பல சிவாலயங்களில் தனிச் சன்னதி யிலும், தனிக்கோயில்களிலும், மலைக் கோயில் களிலும் உள்ளது சிறப்பாகும்.

இதில் சில தலங்களில் மட்டுமே வில், அம்புடன் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் வடிவங்கள் உள்ளது கூடுதல் சிறப்பாகும்.

### வில் ஏந்தி யுத்தக்களம் கண்ட சில இறை அவதாரங்களின் சிறப்புக்கள்

திருவதிகை தல புராணத்தில் சிவபெருமான் வில் ஏந்திய கோலத்தில் எழுந்தருளி திரிபுரம் எரித்து அசுரர் மூவரை வதம் செய்தார். ஆதலால் திரிபுராந்தக மூர்த்தி என அழைக்கப்படுகிறார் .

இராமாயண நாயகனான இராமபிரான் கோதண்டம் எனும் வில்லுடன் எழுந்தருளி இலங்காதிபதி இராவணனை வதம் செய்ததால் கோதண்டராமர் என அழைக்கப்படுகிறார்.

மகாபாரத இதிகாச நாயகனான கிருஷ்ண பகவானின் ஆணையின் வண்ணம் ஆதிசேஷனின் அம்சமான அர்ஜுனன், காண்டிப வில்லுடன் மகாபாரத யுத்த களத்தில் வெற்றி கண்டதால் வில்லுக்கு விஜயன் என அழைக்கப்படுகிறார்.

மேற்காணும் வரலாற்று இதிகாசங்களுக்கு முந்தைய சங்ககால புராண வரலாற்று சுவடுகளைத் தாங்கியுள்ள சூரனை வதம் செய்யும் பொருட்டு வில், அம்புடன் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் வடிவங்கள் சில தலங்களில் வழிபாட்டில் உள்ளது. மேலும் தூண் புடைப்பு சிற்பங்களாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸப்தகிரி மே 2026 விடைகள்

1. பெரியாழ்வார்.
2. சத்யநாராயண ஸ்வாமி.
3. திருவாய்மொழி.
4. குலசேகராழ்வார்.
5. மகாலட்சுமித்தாயார்.
6. கைகேயி.
7. அனந்தாழ்வான்.
8. மதுரகவியாழ்வார்.
9. நம்மாழ்வார்.
10. ஜயந்தன்.
11. அன்னமய்யா.
12. நம்மாழ்வார்.
13. அனுமன்.
14. திருநாவுக்கரசர்.
15. கங்கைகொண்டசோழபுரம்.

வினாடி வினா

## போட்டி எண். 46

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்**

1. செல்வன் எஸ்.பி.விஜயராஜகோபாலன் பெசன்ட்நகர், சென்னை.
2. செல்வன் எஸ்.நிகரன் . என்.ஜி.ஓ.காலணி, சாத்தூர்
3. செல்வன் வி.கே.செந்தூர்குமரன், குகை, சேலம்.

### குகனுக்கு இராமபிரானாகக் காட்சி தந்த முருகப்பெருமான்

இராமாயண காவியத்தில் கங்கை நதிக்கரையில் உலா வரும் குகன் ஒரு சமயம் ஸ்ரீராமபிரானது பிரிவாற்றாமை தாங்காமல் வருந்தி அதனை முருகப்பெருமானின் திருவடியில் கண்ணீருடன் விண்ணப்பம் செய்து வழிபட்டான். அதனைக் கண்ட முருகப்பெருமான் ஸ்ரீகோதண்டம் ஏந்திய ஸ்ரீராமனாகவும், வள்ளி சீதையாகவும், தெய்வானை இலக்குமணனாகவும் காட்சி தந்து குகனின் மனத் துயரத்தை நீக்கி அருளினார் என சுப்பிரமணிய பராக்கிரமம் என்னும் நூல் எடுத்து உரைக்கிறது.

இவ்வரலாற்று சிறப்பினை இயம்பும் வண்ணம் அமையப் பெற்றுள்ள வில் ஏந்திய முருகப் பெருமானின் ஆலயங்கள் மூன்று உள்ளன. அவைகள் பின் வருமாறு:

நெய்வேலி டவுன்ஷிப் அருகிலுள்ள வேலுஉடையான்பட்டு (வில்லுடையான்பட்டு) திருக்கோயில் மூல மூர்த்தியாக ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள வள்ளி, தெய்வானையுடன் வில்லேந்திய ஸ்ரீமுருகப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.



திருவையாறு பஞ்சநதீஸ்வரர் ஆலய வேலவன் கோட்டத்தில் வள்ளி, தெய்வானையுடன் ஸ்ரீதனுசு சுப்ரமண்யசுவாமி எழுந்தருளியுள்ளார்.

இதே போல் கும்பகோணம் அருகிலுள்ள ஆவூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் தனிச் சன்னதியில் எழுந்தருளியுள்ள வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான் கையில் வில், அம்பு ஏந்திய நிலையில் வில் ஏந்திய வேலனாக அருளுகிறார்.

வில்லுடன் அருளும் வேலவன் எழுந்தருளி உள்ள தலங்களில் பசுநெய் விளக்கேற்றி வழிபட திருமண பாக்கியம் விரைவில் கைக்கூடும் என்பது ஐதீகம்.

திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா,99461 28102

# குருவே பரபிரம்மம்

*"குரு பிரம்மா குரு விஷ்ணு குரு தேவோ மஹேஸ்வர: குரு சாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:"* இச்சுலோகம் "குருதான் பரபிரம்மம்" என்று கூறுகிறது.


குருவின் முக்கியத்துவத்தை உணர்த்துவது "குரு பூர்ணிமா" தினமாகும். நம்முடைய அஞ்ஞானம் என்னும் இருளை நீக்கி இவ்வுலக நல்வாழ்வுக்கும், வாழ்வு முடிந்தபின், அவ்வுலக வாழ்வுக்கும் வழிகாட்டியாக குருவே உள்ளார்.

சனாதன தர்மத்தில் கல், புல் என்று சித், அசித் என அனைத்திற்கும் முக்கியத்துவம் அளித்து கொண்டாடப் படும். அப்படி உள்ளபோது, நம் வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கும் "குருவை" போற்றி வணங்க வேண்டும் என்பதற்காக இந்த நாள் உள்ளது. சனாதன தர்மத்திற்கு ஆதாரமாக விளங்கும் வேதங்களைப் பிரித்து கொடுத்தவர் வேதவியாசர். அதனாலே குரு பூர்ணிமா அவருக்கே உரியது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசார்யர்கள், ஜீயர்கள், வைஷ்ணவ பாகவதர்கள் எல்லாம் நமக்கு அந்தந்த காலத்தில் குருவாக நம்மை வழி நடத்துகிறார்கள். ஆசார்யரின் வழியைக் கடைபிடிப்பதால், தெய்வத்தை விட குருவிற்கு முக்கியத்துவமும் உண்டு.

*"வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே..."* பராசரர் மகரிஷிக்கும், சத்தியவதிக்கும் மகனாக வேத வியாசர் பிறந்தார். அவர் விஷ்ணுவின் அம்சமாகவும் தோற்றமளித்தார். 'கிருஷ்ண த்வைபாயனன்' என்று பெயரிட்டனர்.

எந்த ஒரு காரியத்தை தொடங்குமுன் அல்லது ஒரு காவியம் எழுதும் முன் குரு வந்தனம் காணப் படுகிறது. நம் சம்பிரதாயத்தில், ஒரு நாள் மட்டும் கொண்டாடாமல், வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளிலும் இது காணப்படுகிறது.

எல்லாக் காலத்திலும் "குரு சிஷ்ய" பரம்பரை இருந்து வருகிறது. அது தான் நம் முன்னோர் களையும் இப்போதுள்ள வாரிசுகளையும் காக் கிறது என்றால் அது மிகையாகாது. அன்றைய மாணாக்கர்களும் குருகுலத்திலேயே குருவுடன் சேர்ந்து வாழ்ந்து, கைங்கர்யம் செய்து வளர்ந்தார்கள். கல்வி முடிந்தபின், குரு தக்ஷிணை கொடுப்பார்கள். அந்த சம்ப்ரதாயம் பெரும்பாலும் தற்போது இல்லை. ஆனாலும், குரு என்பவரின் மதிப்பு குறையவில்லை. இதுவே மகத்துவம்.



சைவ பரம்பரையில் தக்ஷிணாமூர்த்தி ஆதி குருவாக வணங்கப்படுகிறார். வீராசனத்தில் சிவ பெருமான் மரத்தின் கீழ் அமர்ந்திருக்க, ரிஷிகள் அவரிடம் இருந்துஞானத்தைப் பெறுகிறார்கள். குரு என்பவருக்கு வயது என்பது முக்கியம் இல்லை. முருகப் பெருமான் தந்தைக்கே உபதேசம் செய்து சுவாமிநாதான் ஆனார்.

திருஞானசம்பந்தரின் பல்லக்கை வயது முதிர்ந்த அப்பர் சுமந்தார். இவ்வாறிருக்க குருவின் வயது முக்கியம் இல்லை, ஞானமே முக்கியம் என்பது புலப்படும்.

"வேறொன்றும் நான் அறியேன், வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்" என்று பாடிய மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரை விட பெரியவர். இந்த பாசுரத்தில், "எனக்கு தெய்வம், வேதம் எல்லாமே நம்மாழ்வார்தான். அவரைத் தவிர வேறு ஏதும் அறியேன்" என்று கூறுகிறார்.

*ஸ்ரீ லக்ஷ்மி நாத சமாரம்பாம் நாத யாமுன மத்யமாம்*
*அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்*

கூரத்தாழ்வானின் கூற்றுப்படி, லட்சுமி நாராயணரே முதல் குரு. அதனால் கண்ணன் கீதையில் தானே "விவஸ்வான்" – சூரியனுக்கு ஞான கர்ம சந்நியாச யோகத்தை கற்பித்ததாகக் கூறுகிறார்.

விவஸ்வான், மனுவிற்கு மனு, இக்ஷ்வாகுவிற்கு என்று சூரிய குலத்தில் யோகம் கற்பிக்கப்படுகிறது. இந்த குலத்தில் பிறந்த இராமபிரான் விஷ்ணுவாக இருந்தாலும் வசிஷ்டரின் குருகுலத்தில் பயின்றார். இராமனை எல்லோரும் "புருஷோத்தமன்" என்று கூறுவதற்கு வசிஷ்டர் கற்பித்த "யோக வசிஷ்ட" என்ற முக்கிய அறிவுரைகள் ஆகும். வாழ்க்கையை எவ்வாறு ஒரு மனிதன் நடத்த வேண்டும், நிலை தவறாமல், தர்ம வழியில், சம நிலையில் வாழ்வதற்கு இந்த சம்வாதம் மிக முக்கியமாக உள்ளது.

வால்மீகியின் குருவாக நாரதரின் உபதேசம் நமக்கு இராமாயணம் என்னும் பொக்கிஷத்தை தந்தது. அதை உலகம் முழுக்க பரப்ப செய்த வால்மீகி குருவாகவும், லவ குஷர்கள் சிஷ்யராகவும் இதை பாடல் வடிவில் நமக்கு அருளினார்கள்.

கிருஷ்ணாவதாரத்தில், கண்ணன் சாந்தீபனி என்ற குருவிடத்தில் குருகுல வாசம் செய்து 64 கலைகளும். குரு தக்ஷிணையாக குரு பத்தினி கேட்ட படி, அவர்களின் மகனை அசுரனிடம் இருந்து மீட்டுக் கொடுத்தார். சுக ப்ரஹ்மம் சிறு வயதிலிருந்த ஞானம் பெற்றார், இதற்கு காரணம் அவர் தந்தையான வியாசரும், தேவ குருவான பிருஹஸ்பதியும் ஆவர்.

மஹாபாரதத்தில், கௌரவர்கள் துரோணரிடத்தில் எல்லா வித்தையையும் பயின்றார்கள். எவ்வளவோ நன்மைகளை துரோணர் துரியோதனனுக்குக் கூறியும் குரு வாக்கை மதிக்காததால் அழிந்தான்.

பிரகலாதன் நாரத மகரிஷியிடம் கர்பத்திலேயே "நாராயண மந்திரம்" உபதேசம் பெற்றான். அதனால் அவனை "கர்ப ஸ்ரீமாந்" அதாவது கருவிலே திருவுடையவன் என்று கொண்டாடுவார்கள். இறுதிவரை நாராயண ஜெபத்தை விடவில்லை. அதுவே அவனுக்கு முக்தியை அளித்தது.

பிரம்மனுக்கு வேதத்தில் சில சந்தேகங்கள் ஏற்பட, மஹாவிஷ்ணுவை தியானித்தார், பகவான் ஹம்ஸாவதாரம் எடுத்து வேதத்தின் பொருளை உபதேசித்தார் எனக் கூறுவர். அனைத்து குருவுமே நமக்கு பரபிரம்மத்தை காண்பிக்கிறார்கள். அப்பிரம்மமே வேங்கட கிருஷ்ணனான கீதாசார்யன் தான். எனவேதான் கிருஷ்ண பகவானை "கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்று போற்றி வணங்குகிறோம்.

**பிழைத்திருத்தம் :** கடந்த 2026 ஜனவரி மாத ஸப்தகிரி இதழில் 29ஆம் பக்கத்தில் இடம் பெற்ற நாட்காட்டியைக் கீழ்க்கண்டவாறு திருத்தி வாசிக்கவும்.

## ஜூலை 2026

05–07 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம்.
16 பூரி ஜெகந்நாத ஸ்வாமி ரத யாத்திரை.
17 திருமலையில் ஆனிவர ஆஸ்தானம்,
17–19 ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம்.
24–26 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்.
25 சயன ஏகாதசி.
25–28 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்,29 குரு பௌர்ணமி, வியாச பௌர்ணமி.

## ஆகஸ்ட் 2026


07 ஆடிக்கிருத்திகை.
07–10 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம்.
12 சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம்.
16 நாக சதுர்த்தி, 17 கருட பஞ்சமி.
21 ஸ்ரீவரலக்ஷ்மி விரதம், மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு நாள்
22–25 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்.
25–27 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம்.
28 ஸ்ரீஹயக்ரீவ ஜெயந்தி, ஸ்ரீவிகனச மஹரிஷி ஜெயந்தி, ச்ராவண பௌர்ணமி.
29 காயத்ரி ஜபம்.

## செப்டம்பர் 2026

04 ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி.
13 ஸ்ரீவராஹ, ஸ்ரீபலராம ஜெயந்தி.
15–23 திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்.
14 விநாயக சதுர்த்தி.
19 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை.
21–24 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம்.
23–26 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித்தாயார் பவித்ரோத்ஸவம்.
23 ஸ்ரீவாமன ஜெயந்தி.
24 திருமலையப்ப ஸ்வாமி பாக் சவாரி.
25 அனந்தபத்மநாப ஸ்வாமி விரதம்.

# பூரிசிரவஸு என்னும் மாவீரன்

திரு. எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சீபுரம், 94861 39685




கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களில் முதலாவதாகிய கிருதயுகத்தில் மிக உயர்ந்த அறமும், ஒழுக்கமும் நடைமுறையில் இருக்கும். அடுத்தடுத்த யுகங்களில் அறமும், ஒழுக்கமும் குறைந்து கொண்டே வரும். நான்காவது யுகமாகிய கலியுகத்தில் அறவழியிலான மனிதர்களின் செயல்பாடுகள் ஓரளவுக்கே இருக்கும். அதுவும் அக்கலியுகம் முடிவதற்குள் வெகுவாகக் குறைந்துவிடும் என்று பெரியோர்கள் கூறுவர்.

இந்நான்கு யுகங்களில் மூன்றாவதாக வரும் துவாபர யுகத்தின் இறுதிப்பகுதியில் மகாபாரத யுத்தம் நடந்தேறியது.




ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, தருமபுத்திரர், பிதாமகர் பீஷ்மர், துரோணாச்சாரியார் ஆகியவர்கள் பங்குபெற்ற பொழுதிலும் அந்தப்போரில் யுத்தநெறிமுறைகள் ஓரளவுக்கே பின்பற்றப்பட்டன. மேலும், அப்போரில் பீஷ்மர், துரோணர், அபிமன்யு போன்ற மாபெரும் வீரர்கள் யுத்த நெறிகளுக்குப் புறம்பான விதத்திலேயே கொல்லப்பட்டனர்.

அறநெறிகளைப் பின்பற்றாத மனிதர்கள் வாழக்கூடிய கலியுகம் கூடிய விரைவில் பிறக்கப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறுவது போன்று மேற்கண்ட வீரர்கள் கொல்லப் பட்டதை மகாபாரதம் நமக்கெல்லாம் உணர்த்துகின்றது.

மேற்கண்ட வீரர்களின் வரிசையில், யுத்தநெறிகளுக்கு முரணான வகையில் வீழ்த்தப்பட்ட மற்றொரு வீரனே பூரிசிரவஸு ஆவான். சந்தனு மஹாராஜாவின் தமையனும், பீஷ்மாச்சாரியாரின் பெரியப்பாவுமாகிய பாஹ்லீகன் என்பவர் பாஹ்லீகம் என்ற சிறியதொரு தேசத்தை ஆண்டு வந்தார். இவ்வரசருடய மகனாகிய சோமதத்தனுக்குப் பிற்காலத்தில் விருஷ்ணி குலத்தைச் சேர்ந்த ஷினி என்ற மன்னருடன் பகைமை ஏற்பட்டது. அப்பகைமையானது தலைமுறைகளைத் தாண்டியும் வளர்ந்து வந்தது.

சோமதத்தனுக்கு பூரிசிரவஸ் என்ற மாவீரன் மகனாகப் பிறக்க, விருஷ்ணிகுலத்தைச் சேர்ந்த ஷினியின் புதல்வனாகிய சத்யகா என்பவனின் மகனாக சாத்யகி என்ற மா வீரன் பிறந்தான். இவனுக்கு யுயுதானன் என்று மற்றுமொரு பெயரும் உண்டு.

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையில் மூண்ட மகாபாரதப் போரில் கௌரவர்கள் சார்பாக

பூரிசிரவஸ௴ம், பாண்டவர்கள் சார்பாக சாத்யகியும் போரிட்டனர். அபிமன்யுவின் மரணத்திற்குப் பழிவாங்கும் விதமாக பதினான்காம் நாள் போரில் சூரியன் மறைவதற்கு முன்பு ஜயத்ரதனை வீழ்த்துவதாக அர்ஜுனன் சபதம் செய்திருந்தான். அவ்வாறு ஜயத்ரதனைக் கொல்லாவிட்டால் தான் பிராணத் தியாகம் செய்யப்போவதாகவும் அர்ஜுனன் கூறியிருந்தான். இந்நிலையில், ஜயத்ரதனை அர்ஜுனன் எளிதில் நெருங்காதவாறு பூரிசிரவஸ், உள்ளிட்ட மாவீரர்கள் அவனைச் சூழ்ந்து நின்று பாதுகாத்துக் கொண்டிருந்தனர்.

அன்றைய தினம் கௌரவர்கள் சார்பில் சகட வியூகத்தை வகுத்து, அதன் முன்னணியில் படைத் தலைவர் துரோணாச்சாரியார் நின்று போர் புரிந்து கொண்டிருந்தார்.

உரிய காலத்தில் ஜயத்ரதனைக் கொல்ல வேண்டும் என்று விரும்பிய அர்ஜுனன் தன்னை எதிர்த்த துரோணாச்சாரியாருடன் சிறிது நேரம் மட்டுமே போர் புரிந்த பின்பு அவரை விட்டு விலகி ஜயத்ரதன் இருக்கும் திசையை நோக்கித் தனது தேரைச் செலுத்துமாறு ஸ்ரீகிருஷ்ணபகவானை வேண்டிக்கொண்டான். பகவானும் அவ்வாறே செய்தார்.

ஜயத்ரதனைக் கொல்வதற்காக அர்ஜுனன் கிளம்பிச் சென்று வெகுநேரம் ஆகியதால் கவலையடைந்த தருமபுத்திரர், மகாரதனாகிய சாத்யகியை அனுப்பிவைத்தார்.

சாத்யகியும் தான் செல்லும் வழியில் கௌரவப் படையைச் சேர்ந்த பற்பல வீரர்களை வென்றபடி அர்ஜுனன் இருந்த இடத்தை அடைந்தான். அன்றைய தினம் அர்ஜுனன் ஜயத்ரதனைக் கொல்வதற்கு முன்பாக இருதரப்புகளையும் சேர்ந்த கர்ணன், பீமன், துரோணர், சாத்யகி போன்ற பற்பல வீரர்கள் தங்களுக்குள் வீராவேசமாகப் போரிட்டதைக் குறித்த ஏராளமான விவரணைகள் நம்மை மலைக்கச் செய்கின்றன.

அவற்றைத் தொடர்ந்து, அதாவது அர்ஜுனனால் ஜயத்ரதன் கொல்லப்படுவதற்குச் சிறிது முன்னதாக பரம்பரைப் பகைவர்களாகிய பூரிசிரவஸுவுக்கும் சாத்யகிக்கும் இடையில் பெரும் சண்டை மூண்டது. அச்சண்டையின் முடிவில் இருவரில் ஒருவர்தான் உயிர்பிழைத்திருக்க முடியும் என்று பறைசாற்றுவதைப் போன்று பல்வேறு ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளும் பூரிசிரவஸுவும் சாத்யகியும் தத்தம் ஆயுதங்களை இழந்த பின்பு கைகளால் தாக்கிக் கொள்ளும் துவந்த யுத்தத்திலும் ஈடுபடுகின்றனர். அவர்கள் இருவரும் போரிடும் இடத்திற்குச் சற்று தூரத்தில்தான் ஜயத்ரதனைக் கொல்லும் முனைப்புடன் அர்ஜுனன் போர் நடத்திக் கொண்டிருந்தான்.

ஸ்ரீகிருஷ்ணபகவானும், அதோ பார், அர்ஜுனா! உனது பிரியத்துக்குரிய சாத்யகியும் அவனுடைய ஜன்ம விரோதியாகிய பூரிசிரவஸு௴ம் அற்புதமாகப் போரிடுவதைப் பார்! என்று அர்ஜுனனிடம் கூறினார்.

மகாபாரதப் போரின் பதினான்காம் நாளாகிய அன்றைய தினம் காலையிலிருந்து பற்பல வீரர்களுடன் இடைவிடாமல் சண்டைசெய்திருந்த சாத்யகி, மிகவும் உத்வேகத்துடன் போரிட்ட பூரிசிரவஸுடனான சண்டையின் விளைவாகக் களைப்புற்றுத் தரையில் சாய்ந்தான்.

இதுதான் சமயமென்று சாத்யகியின் மீது பாய்ந்த பூரிசிரவஸு, அடே சாத்யகி, இன்றோடு உன் கதை முடிந்தது என்று எக்காளமிட்டபடி அவனுடைய தலைமுடிக் கற்றையை இறுகப் பற்றியபடி அப்போர்க்களத்தில் இங்குமங்கும் தரதரவென்று இழுத்துச் சென்றான்.

ஒரு கட்டத்தில் அவ்வாறு இழுத்துச் செல்வதை விட்டுவிட்டு, வாள் ஒன்றை உருவிய பூரிசிரவஸு தன்னுடைய ஜென்ம விரோதியாகிய சாத்யகியின் கழுத்தை வெட்ட முற்பட்டான்.

இதைப் பார்த்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, அர்ஜுனா, அதோ பார், உன் நண்பன் சாத்யகியை அந்த பூரிசிரவஸ் கொல்லத் துணிகிறான். என்று கூறவும், சாத்யகியைக் காப்பாற்றும் பொருட்டு அர்ஜுனன் எய்த பாணமானது விரைவாகச் சென்று கத்தியை ஏந்தியிருந்த பூரிசிரவஸின் வலது கையை வெட்டிக் கீழே தள்ளியது.

வலியால் துடித்த பூரிசிரவஸு அர்ஜுனனைப் பார்த்து, ஏ அர்ஜுனா! நான் உன்னுடன் நேருக்கு நேர் சண்டையிடாத நிலையில் நீ என்னை எனது பின்புறத்திலிருந்து இவ்விதம் தாக்குவது சரியா? என்று சினத்துடன் கேட்டான்.

பதிலுக்கு அர்ஜுனனும், ஏ பூரிசிரவஸே! நேற்றைய தினம் பாலகனாகிய என் மகன் அபிமன்யு நிராயுதபாணியாக இருக்கும்பொழுது அவனைச் சுற்றி நின்று நீயும் மற்றவர்களும் தாக்கியது மட்டும் நியாயமானதா? நீ முன்பு செய்த பாவம் இப்பொழுது உன்னைத் திருப்பி அடித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வாயாக! என்று பதிலுரை கூறினான்.

அர்ஜுனனின் வார்த்தைகளைக் கேட்ட பூரிசிரவஸு அதற்கு மேலும் போர் புரிவதில் விருப்பம் இல்லாதவனாய் அந்த யுத்தக் களத்தில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அமர்ந்து கொண்டு சமாதி நிலையில் இருந்தபடி தனது உயிரைவிடத் தீர்மானித்தவனாகத் தியானத்தில் ஆழ்ந்தான். நடந்தவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இருதரப்பு வீரர்களும், பூரிசிரவஸின் மகத்தான காரியத்தைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம், சற்று தூரத்தில் பெருமூச்சுடன் தரையில் வீழ்ந்து கிடந்த சாத்யகி சட்டென்று உத்வேகம் பெற்று எழுந்து நின்றவனாய்க் கையில் ஒரு வாளை ஏந்தியபடி பூரிசிரவஸை நெருங்கினான்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து அனைவரும் வேண்டாம், வேண்டாம் என்று பதறியதைப் பொருட்படுத்தாமல் பூரிசிரவஸை நெருங்கிய சாத்யகி தியானத்தில் ஆழ்ந்திருந்த அவனுடைய தலையை வெட்டி வீழ்த்தினான்.

தன்னுடைய வீரபராக்கிரமத்தால் முன்பு பலராலும் புகழப்பெற்ற சாத்யகி இச்சமயத்தில் அனைவராலும் தூற்றப்பட்டான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பேரழிவுக்குக் காரணமான மகாபாரத யுத்தத்தின் முதல் நாளில் யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் பாண்டவர்–கௌரவர் இரு தரப்புகளையும் சேர்ந்த இலட்சக்கணக்கான வீரர்கள் நேர்மையான முறையில், க்ஷத்திரிய தர்மத்தை ஒட்டியே போர் புரிவோம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர். ஆனால், பதினெட்டு நாட்கள் நடந்து முடிந்த அந்தப் பெரும்போரில் தங்கள் தரப்பே வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கையே அவ்வீரர்களை ஆட்டிப்படைத்தது. அதன் விளைவாக ஏற்பட்டதே பூரிசிரவஸு என்ற மாவீரனின் வீரமரணம்.

பாண்டவர் கௌரவர் இரண்டு தரப்பிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே உயிர் பிழைத்திருக்க, பல்லாயிரக் கணக்கானவர்களின் மரணத்துக்குக் காரணமாக விளங்கியது மகாபாரதயுத்தம்.

ஸ்ரீகிருஷ்ணபகவானால் ஆசீர்வதிக்கப்பட்ட தருமபுத்திரரும், அவருடைய தம்பியரும் அப்போரில் இறுதி வெற்றியைச் சுவைத்தனர் என்பது உண்மைதான். ஆயினும், மாவீரர்களாகிய அபிமன்யு, பூரிசிரவஸு போன்றவர்கள் நியாய–தர்மங்களின்படி அப்போரில் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் எய்தியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்ற எண்ணம் நம் மனங்களில் தோன்றுவதை மறைக்க இயலவில்லை.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையானின் அக்ஷர தீபிகை



ஸப்தகிரி

மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமியின் திருவருளைப் பெற வையுங்கள்.

திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி, 94438 79592.

# ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்

**திவ்யாயுதங்கள் :**

சங்க சக்ர கதாஸி ஸார்ங்காதி திவ்ய ஆயுதை சேவ்யமாநம்

வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும்
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே

– திருவாய்மொழி 5–5–3

சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்

– திருப்பாவை 14





கைய கனலாழி கார்க்கடல்வாய் வெண் சங்கம்
வெய்ய கதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள்

– மூன்றாம் திருவந்தாதி 36

தம் த்ருஷ்ட்வா தேததா தேவா: ஸங்க சக்ரகதாதரம்
அபூர்வ ரூபஸம்ஸ்தாநம் தேஜஸாம் ராஸி மூர்ஜிதம்

– விஷ்ணுபுராணம் 1–967

சங்கு சக்கரங்களை திருக்கைகளிலே தாங்கினவனாய் உறுதியானவனாய் அபூர்வமான திருமேனியினை உடையவனாய் பிரகாசிக்கும் பகவானைத் தேவர்கள் கண்டனர்.

**அருள் பார்வை :**

ஆத்ம போகேந அநுஸம்ஹித பராதிகால
திவ்ய அமல கோமள விஸ்வம் ஆஹ்லாதயந்தம்

எம்பெருமான் எக்காலத்திலும் எப்போதும் குன்றாமல் இருக்கக்கூடிய தமது திவ்யமான அருள் பார்வையினால் அனைத்து ஆத்மாக்களின் குற்றங்களைக் குணமாகக் கொண்டு மன்னித்து அவர்களைக் காத்து மகிழச் செய்வதை தமது பாக்கியமாகக் கருதுகிறான்.

திண்கொள் அசுரரைத் தேய வளர்கின்றான்
கண்கள் இருந்தவா காணீரே

– பெரியாழ்வார் திருமொழி 1–2–6

கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி, நீண்டஅப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே

–அமலனாதிபிரான் 8

அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேற் சாபம் இழிந்தேலோரெம்பாவாய்

– திருப்பாவை 22

**தேமதுர அருட்குரல்**

திவ்ய காம்பீர்ய ஔதார்யா மாதுர்யாதி
அநவதிக குண கண விபூஷிதேந

*அதிமநோஹர திவ்ய பாவ கற்பேண திவ்ய லீலாலாப அம்ருதேந*

எம்பெருமானின் திருவாயிலிருந்து வெளிவரும் பேச்சானது கம்பீரமாகவும், அனைத்தும் அளிக்க வல்லதாகவும், திருக்கல்யாண குணங்களால் அலங் கரிக்கப்பட்டதாகவும், கேட்பவர் உள்ளங்களைக் கவர்ந்திழுப்பதாகவும், பேரின்பத்தை நல்கும் அமிர்தம் போன்றும் அடியார்களை உய்விக்கும்.

*பெய்யுமா முகில்போல் வண்ணா!*
*உன்றன் பேச்சும் செய்கையும்*
*எங்களை மையலேற்றி மயக்க உன்*
*முகம் மாயமந்திரந் தான்கொலோ?*

– நாச்சியார் திருமொழி 2–4

*நடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்*
*கிடந்தவாறு எழுந்திருந்து பேசுவாழி கேசனே*

– திருச்சந்த விருத்தம் 61

*தூமுதல் பத்தர்க்குத் தாந்தன்னைச் சொன்ன என்*
*வாய்முதல் அப்பனை என்று மறப்பனோ*

– திருவாய்மொழி 7–9–3

*தொண்டரோர்க்கருளிச் சோதிவாய் திறந்துன்*
*தாமரைக் கண்களால் நோக்காய்*

–திருவாய்மொழி 9–2–1

*தேசமறியவோர் சாரதியாய்ச் சென்று சேனையை*
*நாசம் செய்திட்டு நடந்தநல் வார்த்தை யறிந்துமே*

– திருவாய்மொழி 7–5–9

**ஸ்ரியா ஸஹாஸீநம்:**

திருவனந்தாழ்வான் படுக்கையிலே பள்ளி கொண்டுள்ள பெருமாளின் திருவடிகளை வருடிய வண்ணமாட பெரியபிராட்டி எம்பெருமானை கணநேரமும் பிரியாமல் அடியார்களுக்கு புருஷகாரபூதையாகச் சேவை சாதித்தருள்கிறாள்.

*நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ:ஶ்ரீரநபாயிநீ*
*யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம்*
*த்விஜோத்தம*

– விஷ்ணுபுராணம் 1–8–17

அகில உலகங்களுக்கெல்லாம் தாயாகவும் விஷ்ணுவின் செல்வமாக, இறையும்அவரைவிட்டு அகலாதவளாகவும் இருக்கின்ற பெரியபிராட்டியா ரான மகாலக்ஷ்மி என்றும் நித்யமாக திருமாலுடன் சேவை சாதித்தருள்கிறாள். பகவான் சர்வவியாபி யாக உள்ளதைப்போலவே மகாலக்ஷ்மியும் சர்வ வியாபியாய் இருக்கிறாள்.

*திவளும் வெண்மதிபோல் திருமுகத்தரிவை*
*செழுங்கடல் அமுதினிர் பிறந்த*
*அவளும் நின்னாகத்திருப்பதுமறிந்தும்*

– பெரிய திருமொழி 2–7–1

*வடிக்கோல வாள்நெடுங்கண் மாமலராள்செவ்விப்*
*படிக்கோலம் கண்டகலாள் பல்நாள்*

– இரண்டாம் திருவந்தாதி 82

*ரூபச்ரியா குணகணைர் விபவேந தாம்நா*
*பாவை ருதார மதுரைச் சதுரைச் சரித்ரை:*
*நித்யம் தவைவ சத்ருசீம் ச்ரிய மீச்வரீம் தாம்*
*த்வாஞ் சாஞ்சித: பரிச்ரேய முதீர்ணபாவ:*

– கூரத்தாழ்வான், ஸ்ரீவைகுண்டஸ்தவம்–80

திருபாற்கடலிலே திருவவதாரம் செய்தருளிய விசேஷத்தினாலும், சௌந்தர்யம் மிளிரும் வடிவ ழகு தேஜஸ்ஸினாலும், எம்பெருமானின் திருவுள் ளம் உகக்கும்படி அறிந்து செயல்புரியும் இனிமை யான திருக்கல்யாண குணங்களினாலும், சேதனர்கள் பக்கலிலே மிக்க இரக்க குணம் உள்ளூறி



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*தத்ரைவ கூராதி$_4$பவாத்ஸ்ய நாத$_2$*
*வாதூ$_4$லநாத$_2$ாச்ச ஸமாச்ரிதாஸ்தம்।*
*தேப்$_4$யோऽபி ராமாநுஜஸம்யமீந்த்$_3$ரஸ்ஸ*
*சங்க$_2$சக்ராங்கரஹஸ்யதே$_4$ாऽபூத் ॥* (52)

காஞ்சியிலேயே கூரத்தாழ்வானும், (இராமாநுஜருடைய மருமக்களான) வாத்ஸ்ய குலத் தலைவரான நடாதூராழ்வானும், வாதூலக்குலத் தலைவரான முதலியாண்டா னும் இராமாநுஜரை ஆச்ரயித்தனர். இராமாநுஜரான யதிராஜர் அவர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்வித்தார்.

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

வழிந்து எம்பெருமானுக்கு அடிமையாக்கி திருவடி சேர்த்தருளும் புருஷகார கருணையினாலும் அகலகில்லேன் இறையுமென்று எம்பெருமானின் திருமார்பிலே நித்ய சந்நிதி பண்ணியிருப்பவளுமான பெரிய பிராட்டியினை தேவரீரின் சேர்த்தியிலே தரிசித்து சரணடைந்து தேவரீருக்கும், பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்யும் பேறு அடியேனுக்கு வாய்க்க வேண்டும்.

*ஒருமகளாயர் மடந்தை யொருத்தி நிலமகள் மற்றைத்*
*திருமகளோடும் வருவான் சித்திரகூடத்துள்ளானே*

– பெரியதிருமொழி *3–3–9*

*யா பிப்ரதீ ஸ்திரசராத் மகமேவ விச்வம்*
*விச்வம்பரா பரமயா க்ஷமா க்ஷமா ச*
*தாம் மாதரஞ்ச பிதரஞ்ச பவந்தமஸ்ய*
*வ்யுச்சந்து ராத்ரய இமாவரி வஸ்யதோமே*

– கூரத்தாழ்வான் –ஸ்ரீ வைகுண்டஸ்தவம் *–81*

எல்லையற்ற பொறுமையுடையவளும், ஸ்தாவர ஜன்மங்களை தம்முடைய திருமேனியிலே வளர்பித்து அனைத்து உயிரினங்களுக்கும் ஆத்மா தரித்திருக்க ஆகாரம் அளித்து இரட்சிப்பவளுமான தாயாகிய பூமி பிராட்டியையும் தந்தையாகிய தேவரீரையும் சேர்த்தியிலே தரிசித்து அடிமைசெய்து திருநாட்டிலே கழியப்பெறவேண்டும்.

*திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்*
*தீவினைகள் போயகலத்* – பெரிய திரு. *3–10–1*

*பாவைருதார மதுரைர் விவிதைர் விலாஸை:*
*ப்ரூவிப்ரமஸ்மித கடாக்ஷ நிரீக்ஷணைச் ச*
*யா த்வந்மயீ த்வமபி யந்மய ஏவ ஸா மாம்*
*நீளா நிதாந்த முரரீ குருதாமுதாரா*

– கூரத்தாழ்வான்–ஸ்ரீவைகுண்டஸ்தவம்–*82*

கம்பீரமான தம்முடைய பேரழகு சௌந்தர்யத் தாலும், எம்பெருமானை தம்வசமாக்க செய்தருளும் சிருங்கார சேஷ்டிதங்களாலும் எம்பிரானை காதலுடன் நோக்குகிறாள்.

திருக்கடைக்கண் வீச்சின் புருவநெரிப்பினாலும், திருவதரங்களிலே தவழும் புன்சிரிப்பினாலும், எம்பெருமானைத் தன்வசமாக்குகிறாள்.

எம்பெருமானிடம் அடியேனின் காலம் வேறு படாமல் களித்திருக்கும் பரம தயாநிதியான நீளா தேவி பிராட்டியானவள் அடியேனைப் பரிபூரணமாக அங்கீகரித்தருள வேணும்.

*கொடியேரிடைக் கோகனகத்தவள் கேள்வன்*
*வடிவேல் தடங்கண் மடப்பின்னை மணாளன்*

– திருவாய்மொழி 982

வைகுண்ட தரிசனம் தொடரும்...

## குன்றென நிமிர்ந்து நில்

**புதிய ஆத்திசூடி 17**



"குன்று" என்றால் சிறிய மலை. இயற்கையின் எந்தவித சீற்றத்திற்கும், புயல், பெருவெள்ளம் போன்று எதற்கும் அசைந்து கொடுக்காமல் நிமிர்ந்து நின்று கொண்டிருக்கும். நமக்கு வாழ்க்கையில் துன்பம் வரும்போதெல்லாம் நாம் என்ன நினைக்கிறோம்? எனக்கு மட்டுமேதான் எல்லா துன்பங்களும் வருகின்றன. மற்றவர்கள் சந்தோஷமாகவே இருக்கிறார்கள் என்றுதானே? அதுதான் தவறு. கஷ்டப்படாத மனிதர்களே உலகத்தில் இல்லை. அந்தக் கஷ்டங்களை மறைத்து, அவற்றை மிதித்து மேலேறி வர வேண்டும். எதற்கும் அஞ்சாது துணிவுடன் நிமிர்ந்து நிற்பதற்கு குன்று போல் நின்றான் என்பது உவமையாகும்.

*"தொல்லை இகழ்ச்சிகள் தீர – இந்தத் தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி..."*

என்று சீறிச் சொல்கிறார். தீமையைக் கண்டு அஞ்சாமல், அவசியமே நேர்ந்தாலும் கூட ஒழுக்கக் கேடானவர்களுக்கு நாம் துணை போகக் கூடாது. நயவஞ்சகர்கள், பொய்யர்கள், துரோகிகள், ஏமாற்றுபவர்கள் கூட்டத்தை விரட்டியடிக்க வேண்டிப் பாடுகிறார் பாரதி.

அக்கிரமங்களையும், அநீதியையும் எதிர்த்து, அறிவு, தர்மம், சத்தியம் போன்ற வழிகளைக் கடைபிடிக்க வேண்டும். *"நெஞ்சில் உறுமின்றி நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை சொல்பவர்களையும் செய்பவர்களையும் துணிச்சலாக எதிர்த்து குன்றென நிமிர்ந்து நில்"* என்கிறார். குழந்தைகளே! நல்வழியைக் கடைபிடித்து குன்றென நிமிர்ந்து நில்லுங்கள்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

# குறுக்கெழுத்துப் புதிர் -120

### இடமிருந்து வலம்


02. குருவாயூரப்பனுக்கு இரவில் ...(9) சுற்றுவது வழக்கமாக இருந்து வருகிறது.
04. கிருஷ்ணர் தன் சுண்டு விரலால் தாங்கி குடையாகப் பிடித்த மலை...(7)
05. மகாபலியின் மகன் ...(8)
08. அஷ்ட லட்சுமிகளில் ஒருவர்...(6)
18. இரண்யாட்சனை அழித்து கடலுக்கு அடியில் இருந்து பூமியை மீட்க எடுக்கப்பட்ட அவதாரம்...(8)

### வலமிருந்து இடம்

07. கிருஷ்ணரின் தந்தை...(5)
10. மொத்தம் 14 திவ்ய தேசங்கள் உள்ள ஊர்...(6)
11. தொண்டரடிப்பொடியாழ்வாரின் இயற்பெயர்...(8)
13. திருதராஷ்டிரனின் மகன்கள் 100 பேர்...(7)
15. திருப்பதி மூலவருக்கு தினமும் அதிகாலையில் ...(6) என்ற இடத்தில் இருந்து பெருமாளின் தோளில் அணிவிக்கும் மாலை, பூலங்கி எடுத்து வரப்படும்.
17. கருடாழ்வார் நான்கு கரங்களில் இரண்டு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியபடி காட்சி தரும் தலம்...(7)
22. ஏழு சப்த தான தலங்களில் ஒன்று...(8)

### மேலிருந்து கீழ்

01. நவதிருப்பதிகளில் குரு கிரகத்திற்கான திருத்தலம்...(7)



தொகுப்பு : திரு. ராஜகுமார்,
சென்னை, 81249 30259

புதிருக்கான விடை 26ஆம் பக்கத்தில் உள்ளது. வாசகர்கள் சரி பார்க்கவும்...

03. பாஞ்சாலதேச மன்னன் துருபதனின் மகள்...(4)
06. தேவகியின் சகோதரன்...(4)
12. இராமனின் நண்பராக விளங்கிய சூரிய புத்ரன்...(5)
14. தசரதனின் மனைவியருள் ஒருவர்...(4)

### கீழிருந்து மேல்

09. பஞ்ச தருக்களில் ஒன்று...(5)
16. மார்பளவு தண்ணீரில் வீற்றிருக்கும் நரசிம்மர்...(9)
19. சோளிங்கரில் யோக நரசிம்மர் வீற்றிருக்கும் மலை...(8)
20. கருவறைக்கு அருகில் கௌதம முனிவரும், காவிரித்தாயும் உள்ள பெருமாள் திருத்தலம்...(10)
21. திருமழிசையாழ்வார் அவதரித்த ஊர்...(5)





சென்ற மாத இதழின் தொடர்ச்சி...

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

அரண்மனையில் இருந்து கண்கலங்கியபடி புறப்பட்ட பசு வேங்கடகிரியில் புற்றின் அருகில் சென்று நின்றது. புற்றிலிருந்து குருதி கசிந்து வருவதும், பசு அந்தப் புற்றின் அருகில் சென்று நிற்பதும், இடையன் அப்புற்றின் அருகில் கீழே விழுந்து கிடப்பதையும் கண்டு அச்செய்தியை வீரர்கள் அரசருக்குத் தெரியப்படுத்தினர். செய்தியை அறிந்த அரசர் உடனடியாக தன்னுடைய பரிவாரங் களுடன் வேங்கடாத்ரிக்கு வந்தடைந்தனர். அங்குக் கண்ட காட்சிகளால் அரசன் சற்று அதிர்ந்து போனான். புற்றில் இருந்து குருதி பொங்கி வழிவதைக் கண்டு அதிசயித்தான். இது என்ன விந்தை? பசு கண்ணீர் விட்டு கலங்குவது என்ன? என்று தனக்குள் தானே விவாதித்துக் கொண்டான். அந்த சமயத்தில் புற்றிலிருந்து சங்கு சக்கரதாரி வெளிப்பட்டார்.

அரசே! நான் புற்றில் மறைந்திருந்த சமயத்தில் இப்பசு தன் பாலை எனக்குத் தந்து என் பசியை ஆற்றியது. அப்படிப்பட்ட இப்பசுவை அந்த இடையன் கோடரியைக் கொண்டு தாக்க முயற்சித்தான். அதை நான் தடுத்தேன். அப்பொழுது என் தலையில் காயம் உண்டானது. அவன் செய்த பாவச் செயலால் அந்த இடையன் இறந்து விட்டான்.

அரசே! ஆதரவின்றி, தாய் தந்தை இல்லாமல், குடும்ப உறவுகள் இல்லாமல் நான் புற்றில் மறைந்து இருந்த போது என்னைக் காப்பாற்றிய பசுவைக் கொல்லத் துணிந்தவனான உன்னுடைய ஆள் பாவச் செயலால் மரணித்தான். அதனால் உண்டான தோஷம், அதன் பலனை நீ அனுபவிக்க வேண்டியதே! நீ பேயாக வடிவம் கொண்டு திரிவாயாக எனச் சாபமிட்டார்.

அச்சாபத்தால் அரசர் மயங்கி கீழே விழுந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு மயக்கம் நீங்க எழுந்து ஸ்வாமியைப் பார்த்து, தேவா! எனக்குத் தெரிந்து யாதோர் தீங்கும் உமக்கு நான் உண்டாக்கவில்லை. கடுமையான சாபம் எனக்கு கொடுத்தீர்கள். என்னை மிகப்பெரிய துன்பத்தில் தள்ளி விட்டீர்கள். நான் பேயாக ஜென்மம் எடுக்க வேண்டுமா? ஸ்ரீஹரி தயவு செய்து என் மீது சிறிது கருணை காட்டுங்கள். இந்தச் சாபத்திலிருந்து விடுபடும் உபாயத்தை எனக்கு அருள வேண்டும் என்று மிகவும் கவலை தோய்ந்த குரலில் அரசன் விண்ணப்பித்துக் கொண்டான்.

அப்போது ஸ்வாமி "என் சாபத்திற்கு மாற்று இல்லை. கொடுக்கப்பட்ட சாபத்தை மீண்டும் திரும்பப் பெறவும் முடியாது. ஆனால் உன்னைப் பார்க்கின்ற போது பரிதாபமாக இருக்கின்றது. கலியுகம் வரையில் இச்சாபத்தை அனுபவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நீ பூலோகத்தில் ஆகாச ராஜனாகப் பிறப்பாய். அப்பொழுது உன் மகளான பத்மாவதியை எனக்குத் திருமணம் செய்து வைத்து கிரீடத்தை எனக்குச் சூட்டுவாயாக. அந்த கிரீடம் 100 எடை கொண்டதாகவும், விலை மதிக்க முடியாத

நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். அந்த கிரீடத்தை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆறு மணி நேரம் நான் தரித்திருப்பேன். அந்த நேரத்தில் என் கண்களில் இருந்து கண்ணீர் வழியும். அந்த ஆறு மணி நேரம் உனக்குச் சொல்ல முடியாத அளவுக்கு சுக அனுபவம் உண்டாகும். அதை நீ அனுபவித்து ஆனந்தப்படுவாயாக'' என்றார். அதன் பிறகு சாபத்தைப் பெற்றவனான சோழ மன்னன் தன்னுடைய நகரத்திற்குத் திரும்பி வந்தான்.

ஹரியும் எப்பொழுதும் போல் புற்றுக்குள் வந்து அமர்ந்தார். ஆயினும் சிரத்தில் ஏற்பட்ட காயத்தினால் உண்டான வலி மிகுந்திருந்தது. ஹரி தன் குருவை நினைத்து மனதில் துதித்தார். உடனே பிருஹஸ்பதியும் அங்கு வந்தார். தன் குருவைப் பார்த்து நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் கூறினார். தனக்கு ஏற்பட்ட இத்துன்பம் நீங்குவதற்கான வழியினைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்பொழுது பிருஹஸ்பதி "ஸ்வாமி சாமானிய மக்களுக்கு வினைப்பயன், காலம், கிரகநிலை போன்றவை இருக்கும். ஆனால் உங்களுக்கு அப்படி ஒன்று உண்டா? உம் மகிமையை மற்றவர்கள் அறியவில்லை. அனைத்தும் அறிந்தவர் தாங்கள் கேட்டதினால் கூறுகிறேன். எருக்கும் பஞ்சு எடுத்து அதை பாலில் தொட்டெடுத்து காயப்பட்ட இடத்தில் வைத்தால் வலி குறையும். இதுதான் சிறந்த வழி'' என்று சொல்லி தன் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஹரியும் குரு சொல்லியபடியே செய்யலானார் என சூதர் விளக்கிக் கொண்டிருக்க, அதைக் கேட்டு சௌனகாதி முனிவர்கள் மிகவும் வருந்தினர்.

சூதர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்து, 'முனிவர்களே விஷ்ணு சரித்திரம் என்பது அவ்வளவு சாதாரணமானது அல்ல. ஒவ்வொரு கதையிலும் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்துள்ளன. அதை நான் முன்பாகவே கணித்து அறிவது என்பது ஆகாத காரியம். இருந்தாலும் நீங்கள் கேட்டதற்காகக் கூறுகிறேன். கிருத யுகத்திற்குப் பிறகு த்ரேதா யுகம். அந்த யுகத்தில் தசரதனும் கௌசல்யாவும் இராமன் மீது மிகவும் பாசம் கொண்டவர்களாக இருந்து உயிர் பிரிந்தனர். அப்பொழுது பிரம்மா தசரதரின் தேஜஸை திந்திரிணி விருட்சமாக அமைத்தார். தசரதனே திந்திரிணி விருட்சம். கௌசல்யா புற்று. லட்சுமணன் சேஷகிரி. அயோத்தியாபுரம் பரிவ்ருத பர்வம். சரயு நதியே ஸ்வாமி புஷ்கரணி. ஸ்ரீராமச்சந்திரனே ஸ்ரீநிவாசன். அதன் பிறகு வாசுதேவர் திந்திரிணி விருட்சம். தேவகி தேவி புற்று. பலதேவன் சேஷாத்திரி. மதுரா புரமே வேங்கட நகரம். யமுனை நதியே ஸ்வாமி புஷ்கரணி. யாதவர்களே விலங்குகள், கோபியர்கள் பறவைகள். ஸ்ரீ கிருஷ்ணனே புற்றில் வாசம் செய்தவரான ஸ்ரீநிவாசன். இன்னும் சொல்வதென்றால் வைகுண்டம் தான் சேஷாசலம். விரஜாநதியே சுவர்ணமுகி. நாராயணனே ஸ்ரீநிவாசன். இப்படிப்பட்ட இடத்தில் வேங்கடேஸ்வர ஸ்வாமி பலவிதமான லீலா வினோதங்கள் செய்பவராக இருந்து வருகிறார். ஸ்வாமி தனக்கு காயம் ஏற்பட்டு துன்பம் அனுபவிப்பதாக நடித்தாரேயன்றி அவருக்கு அப்படி ஒரு துன்பம் என்பது இல்லை.

வைகுண்டத்தை விட்டு சேஷகிரிக்கு வந்து புற்றிலே மறைந்து நின்ற கதையைத் தாங்கள் இதுவரை கேட்டறிந்தீர்கள். இப்பொழுது ஸ்வாமி மூர்த்திகளோடும் மனிதர்களோடும் சேர்ந்து ஆடிய லௌகீகனாக நடித்த கதையைக் கூறுகிறேன் கேளுங்கள் என்றார் சூதர்.

பெருமை அறிவோம்...

### ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம்

திருப்பதியிலிருந்து சுமார் 16கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஸ்ரீநிவாசமங்காபுரத்தில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு சாக்ஷாத்கார வைபவம் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெறும்.

மூன்று நாட்கள் உற்சவத்தின் போது உபய தேவியர்களுடன் ஸ்வாமிக்கு விசேஷமாக காலையில் ஸ்நபன திருமஞ்சனம், மாலையில் ஊஞ்சல் சேவை மற்றும் வாகன சேவையும் நடைபெறும். ஸ்வாமி சேஷ வாகனத்தில், அனுமத் வாகனத்தில், கருட வாகனத்தில் என திருவீதி உலா வருவது காண கண் கொள்ளாக் காட்சியாக அமையும். திருமலைக்கு செல்ல இயலாதவர்கள் இவ்வாலயத்தில் கொலுவீற்றிருக்கும் வேங்கடவனை தரிசித்து இன்னருளைப் பெறுவர்.

# திருவேங்கடவனின் திருவருள்



என்னுடைய பெயர் ஆர்.வி. கீதா. நான் கடலூர் மாவட்டம் சிதம் பரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியராக 33 ஆண்டுகள் பணிபுரிந்து உடல் நிலையைக் கருத்தில் கொண்டு விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு ஓய்வு பெற்றும் ஒரு வருட மாக எந்த பணப்பலனும் கிடைக்க வில்லை. பலமுறை முயற்சி செய்தும் எந்த பலனும் இல்லை. நானும் என் கணவரும் தீவிர பெருமாள் பக்தர் கள். நாங்கள் அடிக்கடி திருமலைக்கு வந்து பெருமாளை தரிசனம் செய்து விட்டு வருவோம். கடந்த அக்டோபர் மாதம் நாங்கள் மூத்தக்குடி மக்கள் தரிசன டிக்கெட் பெற்று அதன் வாயிலாக கலியுகக் கண்கண்ட தெய்வமாக இருந்து அருள் புரிந்து வரும் திருவேங்கடமுடையா னிடம் ஓய்வூதியம் மற்றும் பணப்பலன்கள் வரவில்லையே என்று மனமுருகி பிரார்த்தனை செய்தோம். தரிசனம் முடித்துவிட்டு நாங்கள் தங்கியிருந்த தேவஸ்தான அறைக்கு வந்து என்னுடைய கைப்பேசியைப் பார்க்கும்போது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

எனக்கு வரவேண்டிய ஓய்வூதியம் மற்றும் நிலுவைத்தொகை எல்லாம் என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு இருந்தது. நான் மிகவும் சந்தோஷத்தில் திக்கு முக்காடி போனேன். சாக்ஷாத் அந்த பெருமாளே எனக்கு ஆவண செய்து என் வாழ்வா தாரமான ஓய்வூதியம் கிடைக்க வழிவகுத்தது வேங்கடவனின் மகிமைதான் என்றால் அது மிகையாகாது. என் வாழ்க்கையில் நான் என்றும் மறக்க முடியாத நிகழ்வு இது.

கோவிந்தனின் மகிமை மிகவும் அளப்பரியது. அவரை நம்பி னால் நிச்சயம் கைவிடமாட்டார் என்பது என் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தின் மூலமாக அறியலாம்.

**- திருமதி ஆர்.வி.கீதா, சிதம்பரம்.**

## குறுக்கெழுத்துப்புதிர் 120க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 சி | வ | ப் | பு | க் | கெள | பீ | ன | ம் | | 3 தி |
| ரு | | ர் | | 4 கோ | வ | ர் | த் | த | ன | ம் | ரெள |
| க் | 5 ந | ம | ச் | சு | ம | கா | ரா | ஜா | த | ன | ப |
| கு | 6 க | ம் | லை | ர் | வ | தே | சு | 7 வ | ந் | டி | தி |
| ரு | ம் | சி | 8 ம | கா | ல | ட் | சு | மி | 9 ச | ட் | |
| கூ | ச | ர | ம் | ர | பு | சி | ஞ் | 10 கா | | ப | |
| ர் | ன் | ந | ல | ர் | ண | ய | ரா | நா | ர | ப் | 11 வி |
| சை | 12 சு | னி | ச | ள் | க | ர் | வ | ர | 13 கௌ | க | 14 சு |
| ழி | க் | ர | கா | றை | து | த் | னை | மு | 15 ய | ங் | மி |
| ம | ரீ | 16 ஜ | டி | கு | ங் | ய | ளி | ள் | 17 வெ | ர | த் |
| ரு | 18 வ | ரா | 19 க | அ | வ | தா | ர | ம் | | 20 ஸ்ரீ | ரா |
| 21 தி | ன் | | | ம் | ன | தா | த் | ய் | நெ | ரு | 22 தி |





திருச்சானூர்

ஸ்ரீபத்மாவதித் தாயார் திருக்கோயிலில் அருள்புரியும்

## ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

**05-07-2026 முதல் 07-07-2026 வரை**

ஸ்ரீநிவாசமங்காபுரம்

# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவ மஹோத்ஸவம்



17-07-2026 முதல் 19-07-2026 வரை




திருப்பதி
ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
பவித்ரோத்ஸவம்
26-07-2026 முதல்
28-07-2026 வரை











20–05–2026 அன்று திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் சித்தூர் மாவட்டம், குப்பத்தில் ஸ்ரீபிரசன்ன திருப்பதி கங்கை அம்மன் திருவிழாவை முன்னிட்டு, மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியினர் கங்கையம்மனுக்கு பட்டு வஸ்த்திரங்களைச் சமர்ப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச். வெங்கைய சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்



30–05–2026 அன்று டில்லியைச் சார்ந்த நயாதி ஹெல்த் கேர் ரிசர்ச் ஆக்ரா (பி) லிட். நிறுவனம் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு மற்றும் கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச். வெங்கைய சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் முன்னிலையில் தி.தி.தே.விற்கு மின்சாரப் பேருந்தை நன்கொடையாக அளித்தபோது



06–05–2026 அன்று கொல்கத்தாவை சார்ந்த ஹிமாத்ரி பௌண்டேஷன் எஸ்.வி. பிராணதான அறக்கட்டளைக்கு ரூ.2.50 கோடி நன்கொடையை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்களிடம் அளித்தபோது



ஹனுமத் ஜெயந்தியை முன்னிட்டு 12–05–2026 அன்று திருமலையில் ஜாபாலி ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.எம்.ரவிந்த்ரா,ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சி.எச். வெங்கைய சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



12–05–2026 அன்று மும்பையைச் சார்ந்த திரு.விஜய் ரமேஷ் சந்திரா எனும் பக்தர் எஸ்.வி. பிராணதான அறக்கட்டளைக்கு ரூ.1.03 கோடி நன்கொடையை தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச். வெங்கைய சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்களிடம் அளித்தபோது



மூலவர் : திருவிக்கிரமர் (உலகளந்த பெருமாள்)

உற்சவர்: ஆயனார், கோவலன்

தாயார் : பூங்கோவல் நாச்சியார்

தலமரம்: புன்னை

தீர்த்தம் : பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், ஸ்ரீசக்ர தீர்த்தம்

பூசைக்காலம்: விச்வரூபம், திருவனந்தல், காலசந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, அர்த்தஜாமம்.

மகாபலி சக்கரவர்த்தி நடத்திய வேள்விக்கு வாமனராக திருமால் அவதாரம் எடுத்து வந்த வரலாறு எல்லோரும் அறிந்ததே. வாமனராய் வந்து விசுவரூபம் எடுத்த காட்சியைக் காண மிருகண்டு முனிவர் விரும்பினார். நாரதரின் வழிகாட்டுதலின்படி கிருஷ்ணபத்ரா நதிக்கரையில் திருமாலை வழிபடச் சொன்றார். மிருகண்டு முனிவரும் அவர் மனைவி மித்ராபதியும் அன்னதானம் செய்து வரும் போது வயோதிக வேடத்தில் வந்த திருமால் அவர்களிடம் அன்னம் கேட்க, உணவளித்த பதிபக்தி நிறைந்த மித்ராபதி, மிருகண்டு முனிவருக்கு திருமால், விசுவரூபதரிசனத்தைக் காட்டியருளிய தலமே திருக்கோவலூர் திவ்யதேசமாகும்.

சுமார் 5 ஏக்கர் பரப்பளவில், தமிழகத்தின் மூன்றாவது உயரமான கோயில் கோபுரத்தைக் கொண்டது (சுமார் 192 அடி). பதினொரு அடுக்கு கொண்டது. இவ்வாலயத்தில் மூலவரான உலகளந்த பெருமாளின் கம்பீரமான சிலை, தாரு மரத்தால் செய்யப்பட்டு, ஒரு திருப்பாதத்தை உயர்த்திய நிலையில், தனது வலது திருக்கரத்தில் சங்கையும், இடது திருக்கரத்தில் சக்கரத்தையும் ஏந்தியபடி காட்சியளிக்கிறார். மேலும், மூலவரின் வலப்புறத்தில் மகாலட்சுமி, பிரகலாதன் மற்றும் மகாபலி ஆகியோரின் சிலைகளும், இடப்புறத்தில் சுக்ராச்சாரியார், மிருகண்டு முனிவர் மற்றும் முதலாழ்வார்களின் சிலைகளும் உள்ளன. உற்சவர்களான கோபாலன் (கோவலன்) மற்றும் பூங்கோவல் நாச்சியாரின் உலோகச் சிலைகளும் கருவறையில் வைக்கப் பட்டுள்ளன. சாளகிராமத்தினாலான கிருஷ்ணர் தனிச் சன்னதியில் எழுந்தருளியுள்ளார். கோயிலுடன் தொடர்புடைய பதினாறு கோயில் குளங்கள் உள்ளன. கோயிலுக்கு வெளியே அமைந்துள்ள சக்ர தீர்த்தம் மிகவும் முக்கியமானது. பிரம்மா வாமனரின் திருப்பாதங்களைக் கழுவப் பயன்படுத்திய நீரிலிருந்து சக்ர தீர்த்தம், பெண்ணா நதி தோன்றியதாக நம்பப்படுகிறது. பஞ்ச கிருஷ்ணாரண்ய திருத்தலங்களில் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். கிருஷ்ணருக்கு முன்னதாக யசோதைக்கு அவதரித்த மாயை என்னும் துர்கையும் இங்குள்ள அர்த்தமண்டபத்தில் காட்சி அளிக்கின்றார்.

கோபுர நுழைவாயில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் நிறைந்து, கருவறையில் விவரிக்க முடியாத பிரகாசமான இறைவனைக் காண கிடைப் பதற்கரிய கண்கொள்ளாக் காட்சிகள் கொண்ட இப்புனிதத்தலத்திற்கு 05.07.2026 அன்று விமானங்கள், இராஜகோபுரம், மூலவர் பெருமாள், தாயார் மற்றும் பிற சன்னிதிகளுக்கும் "மஹாஸம்ப்ரோஷணம்" விமரிசையாக நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு வாமனரான திருவிக்கிரமரின் இன்னருளைப் பெற்றிடுவோம்.



# திருக்கோவலூர் திருத்தலம்



**புராண வரலாறு:**

இது ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்கள் எட்டினுள் ஒன்று. பிரம்ம வைவர்த்த புராணம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

மநுவின் அரச மரபில் தோன்றிய விருஷத்வஜன், சிவபிரானை வணங்கி வரம் பெற்று, அதனால் ஏற்பட்ட கர்வத்தால் பிற தெய்வங்களை அவமதித்ததால், சூரியனின் சாபத்திற்கு ஆளாகி, தன்னுடைய செல்வம் அனைத்தையும் இழந்தான். மிகவருந்தி சிவபிரானைச் சரண் அடைய, சிவபிரான் தன் சூலப் படையால் சூரியனைத் தாக்க, சூரியன் பிரம்மனை அடைந்து, அவர் கூறிய வழியில், சூரியனின் பிழையை பகவானிடம் சொல்ல, ருத்ரன் வந்து பகவானிடம், என் அடியவனான விருஷத்துவஜனுக்குச் சாபம் கொடுத்ததால், என்னால் பொறுக்க இயலவில்லை என்று கூறினான். பகவான் விருஷத்துவஜனும், அவன் மைந்தன் ஹம்ஸத்வஜனும் இறந்து விட்டதாலும், ஹம்ஸத்வஜனின் மைந்தர்களான தர்மத்துவஜனும், குசத்துவஜனும் நாட்டை இழந்து துன்பப்படுவதால், இனிமேலும் சூரியனைத் துன்பப்படுத்துவதால் பயன் இல்லை என்று கூறினான்.

குசத்வஜனுக்குத் திருமகளின் க்ருபையால் வேதவதி என்ற பெயரில் மகள் அவதரித்து எம்பெருமானையே மணக்கவேண்டும் என்ற குறிக்கோளோடு, தவம் செய்தாள். அவளுடைய பேரழகைக் கண்டு, அவளைக் கவர்ந்து செல்ல வேண்டும் என்று முயன்று அங்கு வந்த இராவணன், வேதவதியின் தவ வலிமையால் தடுக்கப்பட, அப்போது வேதவதியின் செவியில் ஒரு அசரீரி முழக்கம் கேட்கிறது. "அடுத்த பிறவியில் வேதவதி எம்பெருமானை மணாளனாக அடைவாள் என்றும், அவள்பால் முறை அற்ற காதல் கொண்ட இராவணன், அடுத்த பிறவியில் இதே காரணத்தால் கொல்லப்படுவான்" என்றும் அசரீரி கூறிய வண்ணம், வேதவதி சீதையாகப் பிறக்கிறாள். அயோத்தி இராமனைக் கணவனாக அடைகிறாள். இராமனால் இராவணன் கொல்லப்படுகிறான்.

குசத்வஜனின் இரண்டாம் மனைவியாகிய மாதவி என்பவள், தவம் செய்து, திருமகளின் க்ருபையால் துளசி என்ற ஒப்பற்ற அழகுடைய மகளைப் பெற்றெடுக்கிறாள். துளசியும் பகவானையே கணவனாகப் பெறுவதற்காகத் தபஸ் செய்கிறாள்.

பிரமன் தோன்றி, "துளசியின் விருப்பம், அவளுடைய அடுத்த பிறவியில்தான் நிறைவேறும் என்றும், முற்பிறவியில் பக்தி உணர்வில் மிக்க இராதையின் அருளாற்றலோடு கூடிய கோபிகையாக அவள் இருந்தாள் என்றும், கண்ணனின் அருளாற்றலோடு கூடிய, சுதாமா என்பவன், முற்பிறவியில் அவளை விரும்பவே,



# திருச்சாளக்கிராமம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அவனை அரக்கனாகுமாறு அவள் சபித்ததனால், அவன் சங்கசூடன் என்ற பெயரில் தற்போது பிறந்திருப்பதாகவும் சொல்லி, அவனை இப்பிறவியில் நீ மணந்து, அடுத்த பிறவியில் கண்ணனை மணக்கும் வாய்ப்பினைப் பெறுவாய்" என்று சொன்னான். சங்கசூடனை மணக்கிறாள் துளசி. சங்கசூடனின் ஆற்றலும் வளர்கிறது. அசுரர்களின் மாமன்னனாக உயர்ந்தான். தேவர்களுக்கு அவன் செய்யும் கொடுமைகளும் வளர்கின்றன.

தேவர்கள் பகவானை வேண்ட பகவான் சிவபிரானை அழைத்துச் சூலப் படையைக் கொடுத்து, சங்க சூடனை அழிக்க ஆணை இடுகிறார். சிவபிரான், சங்க சூடன் அணிந்துள்ள கவசத்தின் பாதுகாப்பும், அவன் மனைவி துளசியின் கற்புக்காவலும் இருக்கும் வரையில், சங்கசூடனை எதுவும் செய்ய இயலாது என்று கூற, பகவான் அந்தண வடிவம் கொண்டு, சங்க சூடனிடம் சென்று, அவன் உள்ளம் உருகுமாறு போற்றி, அவனிடம் யாசித்து, அவனுடைய கவசத்தைப் பெற்று அதை அணிந்து, சங்க சூடனின் வடிவத்தில் துளசியை நோக்கி வர, துளசி தன் கணவன் என்று நினைத்ததால், துளசியின் கற்பில் குறைபாடு தோன்றியதாக புராணம் கூறுகிறது.

மற்றொரு வரலாறு : சங்கசூடனுக்கு ஜலந்தரன் என்று மற்றொரு பெயர் இருந்ததாகவும், ஜலந்தரன் மண்ணுலகையே துன்பத்தில் ஆழ்த்தி, பார்வதியையே கவர முயன்றதாகவும், பகவான். ஜலந்தரன் உருவில் அவனுடைய கவசத்தை அணிந்து, பிருந்தை என்ற ஜலந்தரனின் மனைவியை நோக்கிச் சென்ற போது, அவள் பெருமானை வரவேற்று உபசரித்து கணவனாகக் கருதி அவர் பருகிய பாலின் மிச்சத்தைப் பருகியதாகவும். அதனால் அவளுடைய கற்பு நிலை கெட்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஜலந்தரன் அழிக்கப்பட உண்மையை உணர்ந்த துளசி, பகவானைக் கல்லாக ஆகுமாறு சபிக்க சாளக்கிராம அர்ச்சை நிலையில் தன்னைக் காட்டி, அவளுடைய முற்பிறவி நிலையை நினைவுபடுத்தி, அவளைத் துளசிச் செடியாகவும் கண்டகி நதியாகவும் மாறுமாறு வரம் அளித்து திருமகளுடன் காட்சி கொடுத்தார். அந்த இடத்தில் சால மலர்கள் நிறைந்து இருந்ததால், சாளக்கிராமம் என்று திவ்யதேசம் வழங்கப்பெறுகிறது.

நேபாளத்தில் பெருகும் கண்டகி நதியில்தான் அழகிய பல வகையான சாளக்கிராம மூர்த்தங்கள் கிடைக்கின்றன.

## சிறப்புகள்

சாளக்கிராமம் என்ற சொல், ஸ்ரீ வைஷ்ணவர்கள் தத்தம் வீடுகளில் ஆராதிக்கும் மூர்த்தங்கள் என்றாலும் இது 108 திவ்ய தேசங்களில் ஒன்றான சாளக்கிராமம் என்ற திவ்யதேசம். திருமங்கை ஆழ்வார் "பேராயிரமும் ஓதுமின்கள், அன்றி இவையே பிதற்றுமினே" என்று சொல்கிறார். "வடமொழியில் அமைந்த ஆயிரம் திருநாமங்களையும், மொழி அறிந்தோர் கூறுக. அப்படி இயலவில்லையானால் இந்தப் பத்துப் பாசுரங்களை இனிய தமிழில் கூறுக: பயன் ஒன்றே" என்று ஸ்ரீ உ.ப.வே. அண்ணங்கர ஆசாரியார் ஸ்வாமி விளக்கம் கொடுத்துள்ளார்.

| | |
|---|---|
| பெருமாள் | : ஸ்ரீமூர்த்திப்பெருமாள் (வடக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : ஸ்ரீதேவி நாச்சியார். |
| விமானம் | : கனக விமானம் |
| தீர்த்தம் | : சக்கரதீர்த்தம், கண்டகி நதி |
| பிரத்யக்ஷம் | : பிரமன், ருத்ரன். கண்டகி என்ற வேசி |
| மங்களாசாஸனம் | : பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார் |

*உக்கிரக் கனகன் தன்னை உகிரினால் பிளவு செய்தே*
*நக்கரைக் கிரியினோட எடுத்த நாலைந்து கையான்,*
*கொக்கரித்து எறிந்த சூலம் உதிர்த்து அவன் ஆவி கொண்ட*
*சக்கரத்து எழில்கொள்சாளக் கிராமநாதன் தாள் வாழி*

– திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம்

## தியானச்லோகம்

*ஸாளக்ராம தராதரே சுபகரே ஸ்ரீ சக்ர தீர்த்தாச்ரயே*
*ஸ்ரீ மூர்த்திஸ் ஸகலைஸ் ஸமர்ச்சி தபதத்வந்த்வோ ஹ்ரியுதீசீமுக:*

ப்ரஹ்மே சாந வரப்ர தாந ஸுமுக : ஸ்ரீதேவிகா வல்லப:

ஸ்ரீமத் வ்யோம விமாந பூஷித தநுர் நாநாக்ருதீ ராஜதே

– ஸ்ரீ விஷ்ணு ஸ்தலாதர்சம்

**13. பாசுரம்:**

வெந்தார் என்பும் சுடு நீறும், மெய்யில் பூசி கையகத்து ஓர்
சந்து ஆர் தலைகொண்டு உலகு ஏழும் திரியும்
பெரியோன் தான் சென்று, எந்தாய்! சாபம் தீர்
என்ன, இலங்க முதுநீர் திருமார்பில்
தந்தான், சந்து ஆர் பொழில் சூழ்ந்த
சாளக்கிராமம் அடை நெஞ்சே

– திருமங்கை ஆழ்வார்

உண்டாம் முறைமை உணர்ந்து, அடிமைப் பேர் பூண்டேன்,
பண்டு ஆம் குடி, குலத்தால், பல்மதத்தால் - கொண்டாட்டால்.
ஆள் அக்கிராமத்தால், அல்லல் பேர் பூணாமல் சாளக்கிராமத்தார் தாட்கு

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்:**

941. ஓம் அநாதி:நம:

ஆதியந்தமில்லாப் பரமபுருஷன்.

ஓம் உஷா:நம:

கிருஷ்ணனின் பேரன். அநிருத்தனின் மனைவி. உஷாவுக்கு அந்தர்யாமிநீ.

942. ஓம் பூர்புவ:நம:

அடியார்களின் இருப்பிடம்

ஓம் வஸுவித்யாநம

செல்வத்தை வேண்டி செய்யும் உபாஸனத்தில் தியானிக்கப்படுபவள்.

943. ஓம் லக்ஷ்மீ:நம:

அடியார்களின் செல்வம்.

ஓம் த்ருதி:நம:

மனோதைர்யத்தை அளிப்பவள்.

944. ஓம் ஸுவீர:நம:

பக்தர்களின் துன்பம் தீர்க்கவல்ல சக்தி உடையவன்.

ஓம் ஸஹா:நம:

எதையும் பொறுக்கக்கூடிய சக்தியை அளிப்பவள்.

945. ஓம் ருசிராங்கத:நம:

அநுபவிப்பதற்கு அழகிய திருமேனியை உடையவன்.

ஓம் சிஷ்டா:நம:

சாஸ்திரங்களால் தெளிவாக விளக்கப் படுபவள்.

946. ஓம் ஜநந:நம:

தன்னை அநுபவிப்பதற்கான கர்ண களேபரங்களை அளிப்பவன்.

ஓம் இஷ்டா:நம:

விரும்பியதைப் பெறச் செய்யப்படும் யாகங்களால் ஆராதிக்கப்படுபவள்.

947. ஓம் ஜநஜன்மாதி:நம:

ஜனங்களின் பிறப்புக்கு நிமித்த காரணமானவன்.

ஓம் சுசீ:நம:

மிகமிகச் சுத்தமானவள்.

948. ஓம் பீம:நம:

தன்னை அநுபவிக்காதவர்க்குப் பயங்கரம் ஆனவன்.

ஓம் தாத்ரீ:நம:

அனைவர்க்கும் தாயாராக விளங்குபவள்.

ஸ்ரீமதே ஸ்ரீதேவி ஸமேத ஸ்ரீஸ்ரீமூர்த்தி பரப்ரம்மணே நம:

**குறிப்பு:**

நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவிலிருந்து 128 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.

திவ்ய தேச வைபவம் தொடரும்...

## பக்தர்களின் கவனத்திற்கு...

- **"நீரின்றி அமையாது உலகு" என்பார் வள்ளுவர். எனவே திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர்கள். தண்ணீர் குழாய்களை உபயோகித்த பின்னர் நிறுத்தி விட்டுச் செல்லுங்கள்.**
- **மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவும். தேவையில்லாத நேரங்களில் மின்சாரத்தை நிறுத்தி வையுங்கள்.**

# நாரதர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சௌம்யநாதர் - நந்தலூர்

ஸ்ரீ மஹாவிஷ்ணு பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்ற ஐந்து நிலைகளில் தன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாக ஐதிகம். இவற்றில் அர்ச்சை என்பது பக்தர்கள் பகவானுக்கு ஒரு திருவுருவத்தை அமைத்து, அர்ச்சித்து வழிபாடு செய்வதன் பொருட்டு ஏற்பட்டது. அனைத்து ஆலயங்களிலும் இந்த அர்ச்சா அவதார நிலையில் பக்தர்கள் ஸ்ரீ மஹா விஷ்ணுவை அர்ச்சனை செய்து வழிபட்டு மகிழ்கின்றனர்.

அனைத்து வைணவ ஆலயங்களிலும் அருள்பாலிக்கும் அர்ச்சா மூர்த்திக்கு என்றே அந்தந்தப் புண்ணியத் தலத்தின் பின்னணியிலோ, ஒரு புராண நிகழ்வின் அடிப்படையிலோ திருநாமங்கள் வழங்கப்படுகின்றன. இறைவன் திருநாமங்களில் சௌம்ய நாதன் மற்றும் சௌம்ய நாராயணன் போன்றவை ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருநாமங்களாக அமைந்து உள்ளன. 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருக்கோஷ்டியூர் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமமும் சௌம்ய நாராயணன் என்பதாகும்.

சௌம்ய என்பதற்கு மிகவும் வசீகரமான, அழகான, அமைதியான போன்ற பொருள்கள் உள்ளன. சந்திரனுக்குரிய சோமன் என்ற பெயரையொட்டி இது அமைந்ததாகக் கூறுவர். இதையே தமிழில் சொக்க நாதர் (சொக்கர் என்பது அழகைக் குறிக்கும்) என்று குறிப்பிடுகின்றனர். ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்குரிய இன்னொரு திருநாமமான சுந்தர ராஜன் என்பதும் இதே பொருளைத் தருவதாகும்.

ஒருமுறை பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு, நாரத முனிவரின் கோரிக்கைக்கு இணங்க பூலோகத்திற்கு விஜயம் செய்தபோது பஹுதா ஆற்றின் கரையில் அமைந்த இப்பகுதியின் இயற்கை வனப்பையும், அமைதியான சூழலையும் கண்டு முகமலர்ச்சி அடைந்தார் என்றும், சௌமியமான அந்தத் திருமுகத்தைக் கண்டு அகம் மகிழ்ந்த நாரதர் பகவானிடம் இத்தலத்தில் சௌம்யநாதன் என்ற திருப்பெயரோடு எழுந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பகவான் இங்கு இப்பெயரில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு திருவேங்கடவனைப் போன்றே அருள்பாலித்து வருகின்றார் என்று தல புராணம் தெரிவிக்கிறது. நாரத முனிவராலேயே ஸ்ரீசௌம்ய நாதன் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஐதிகம்.



- விஜயலட்சுமி சுப்பிரமணியம்,
கல்லிடைக்குறிச்சி, 9842539275



### ஆலயம் இருப்பிடம்

ஆந்திர மாநிலம், கடப்பா மாநகரில் இருந்து 45 கி.மீ. தொலைவிலும், திருப்பதி யிலிருந்து 98 கி.மீ. தொலைவிலும் நந்தலூர் அமைந்துள்ளது. திருப்பதி –நந்தலூருக்கு இரயில் வசதி உள்ளது. நந்தலூர் இரயில் நிலையத்திலிருந்து 2கி.மீ. தூரத்தில் இத் திருக்கோயில் அமைந்து உள்ளது.

### ஆலயம் திறந்திருக்கும் நேரம்

இவ்வாலயம் பக்தர்களின் தரிசனத்திற் காக காலை 6.00 மணி முதல் 1.00 மணி வரையிலும், மீண்டும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.

### உற்சவங்கள்

பிரம்மோற்சவம் ஆஷாட மாதம் (ஜூலை –ஆகஸ்ட்) வெகு விமரிசையாக நடைபெறும். இவ்வாண்டு பிரம்மோற்சவம் 22-07-2026 முதல் 30-07-2026 வரை நடைபெற உள்ளது. துவஜாரோஹத்துடன் துவங்கி, 5ஆம் நாள் கருட சேவையும், 7வது நாள் திருக்கல்யாண உற்சவ மும், 8வது நாள் திருத்தேர் மற்றும் 9வது நாள் சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணத்துடன் இனிதே நிறைவுறும்.

### அருகில் உள்ள பிற ஆலயங்கள்

ஸ்ரீகாமாக்ஷி சமேத உள்ளங்கேஸ்வர ஸ்வாமி சிவாலயம் நந்தலூரில் அமைந்து உள்ளது. பக்தர்களின் உள்ளங்களிலும் சிவ பெருமான் குடிகொண்டு உள்ளார் என்ற ஐதிகத் தின் அடிப்படையில் இப்பெயர் அமைந்ததாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர். இந்த ஆலயத்தில் சண்டீஸ்வர பிரதக்ஷிணம் சிறப்பானதாகும்.

அனைத்து பக்தர்களுக்கும் வரங்களை வாரி வழங்கும் இந்தப் பெருமாளின் சௌம்யமான காட்சி கண்டு பக்தர்கள் இவரை தமிழில் சொக்கநாதர் என்றே அழைக்கின்றனர்.

பாஹு என்பது கரங்களை குறிக்கும். வளங்களை அள்ளித் தருகின்ற ஆறு என்ற பொருளில் இப்பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். மேலும், திருமாலுக்கு மகிழ்ச்சியைத் தருபவர் என்ற பொருள் கொண்ட நந்தன் என்ற பெயர் இருப்பதால் இந்த ஊர் அவர் பெயரால் நந்தலூர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவதுண்டு.

சுமார் பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த அற்புத ஆலயம் இரண்டு பிரகாரங்களுடன் முழுவதும் கருங்கல் திருப்பணியில் அமைக்கப்பட்டு உள்ளது. இப் பகுதியை சோழ மன்னர்கள் ஆண்டு வந்த போது முதலாம் குலோத்துங்க சோழ மன்னரால் 11வது நூற்றாண்டில் இந்த ஆலயம் கட்டப்பட்டதாக வரலாறு தெரிவிக்கிறது. பின்னர் பாண்டிய, காகதீய, விஜயநகர மற்றும் சாளுக்கிய மன்னர்களால் விரிவாக்கம் பெற்று நன்கு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த ஆலயத்தில் காணப்படும் பெரும்பாலான கல்வெட்டுக்கள் தமிழில் அமைந்து உள்ளன. ஆலயத்திலும் இந்த ஊரின் பிற இடங்களிலும் காணப்படும் கல்வெட்டுக் களின்படி இந்த ஊர் இந்து சமய வளர்ச்சிக்கும், திருவிழாக் களுக்கும் பெயர் பெற்ற ஒரு தலமாக விளங்கியது புலப் படுகிறது.

### ஆலய அமைப்பு

தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் உள்ள இந்த ஆலயம் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தினரால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் நுழைவு வாயிலை ஐந்து தளங்களும், ஐந்து கலசங்களும் கொண்ட ராஜகோபுரம் அலங்கரிக்கிறது. இதை காலி கோபுரம் என்கின்றனர். இந்த கோபுரம் மூன்றாவது சோமேஸ்வரன் என்ற மன்னரால் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகவும், தெற்கு நுழைவாயிலில் உள்ள கோபுரம் விஜயநகர ஆட்சியில் கட்டப்பட்டதாகவும் வரலாறு தெரிவிக்கிறது. காகதீய மன்னரான பிரதாபருத்திரர் நந்தலூரு, அடவூரு, முன்னூரு, மந்தாரம் மற்றும் ஹஸ்தாரம் ஆகிய ஐந்து கிராமங்களை ஆலயத்திற்குக் கொடையாக அளித்ததாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 10 முதல் 17வது நூற்றாண்டு வரையிலான ஏராளமான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை இந்த ஆலய நிர்வாகம், பராமரிப்பு, உற்சவங்கள் போன்றவற்றை சிறப்பாகச் செய்வதற்காக 120 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள்

அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. 16வது நூற்றாண்டில் இப்பகுதியின் படைத் தலைவராகத் திகழ்ந்த வேங்கடநாதர் என்பவரின் மனைவி சென்ன மணி என்பவர் ரத்தினகிரீடம், சங்கு சக்கரம் போன்ற வற்றை இறைவனுக்கு வழங்கி இருக்கிறார்.

ஆலயத்திற்குச் சற்று முன்பாக சாலையில் அமைக்கப்பட்டுள்ள ஸ்வாகத தோரணம் எனப்படும் அலங்கார வளைவில் நடுநாயகமாக ஸ்ரீ சௌம்ய நாத ஸ்வாமி, வலப்புறம் நாரதர் மற்றும் இடப்புறம் கருடனின் சுதைச் சிற்பங்களைக் காணலாம். நுழைவாயிலை அலங்கரிக்கும் ஐந்து நிலை ராஜ கோபுரத்தை அடுத்து நுணுக்கமாக வடிக்கப்பட்ட தீபஸ்தம்பம், பலிபீடம், கொடிமரம், கருடன் சன்னதி, அருகில் குளம் போன்றவை மிகப் பரந்த வெளியில் அமைந்துள்ளன.

கொடி மரத்திற்குத் தென்புறம் காணப்படும் ஸ்ரீ வீர ஆஞ்சநேய ஸ்வாமியை கிரக பீடைகள் விலக பக்தர்கள் வழிபடுகின்றனர். அடுத்ததாக மூன்று நிலை கோபுரம், முக மண்டபம், 100 தூண்களைக் கொண்ட மஹா மண்டபம், துவார பாலகர், கருவறை என்று சிறப்பாக இந்த ஆலயம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. மண்டபத் தூண்களில் இராமாயண மற்றும் பாகவதச் சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டு உள்ளதைக் கண்டு ரசிக்கலாம். மேற்கூரையில் காணப்படும் ஒரு பெரிய மீன் சிற்பம், கலியுகாந்தம் என்ற கலியுகத்தின் முடிவில் உயிர் பெற்று பிரளய நீரில் நீந்திச் செல்லும் என்று இங்குள்ள பக்தர்கள் நம்புகின்றனர்.

பதகவிதா பிதாமகர் அன்னமய்யா அவர்கள் அவதரித்த தாள்ளபாக்க கிராமத்தில் இருந்து நந்தலூர் சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது. அன்னமய்யா இத்தலத்திற்கு வந்து ஸ்ரீ சௌம்யநாத ஸ்வாமி மீது பதினாறு கீர்த்தனைகளை எழுதி இருக்கிறார். ஸ்ரீ சௌம்யநாத ஸ்வாமியை அவர் “சொக்கநாதா” என்றே அழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**கருவறை**

கருவறையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசௌம்ய நாதப் பெருமாளின் சாளக்ராமத் திருமேனி ஏழு அடி உயரமான கம்பீரமானத் தோற்றம் கொண்ட ஓர் அற்புதத் திருமேனியாகத் திகழ்வது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும். பத்ம பீடத்தின் மீது நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் அருள் பாலிக்கும் ஸ்ரீ சௌம்யநாதரின் பின்னிரு திருக்கரங் களை சங்கு சக்கரம் அலங்கரிக்க, முன் வலக்கரத் தில் அபய முத்திரையோடும், முன் இடக்கரம் இடது தொடையின் மீது வைத்தபடியும் காட்சி தருகிறார். திருமலை திருவேங்கடவனுக்கும் இங்குள்ள சௌம்யநாதனுக்கும் உருவத்தில் ஒரே ஒரு வேறு பாடு மட்டுமே உண்டு. வேங்கடவனின் வலக்கை வரத ஹஸ்தமாகத் திகழ இங்கு அபய ஹஸ்தமாக காட்சி தருகிறார். ஆலய நுழைவாயிலிலிருந்து 100 அடி தொலைவில் கருவறை இருந்தாலும் அங்கு இருந்தே பக்தர்கள் தரிசிக்கும் வகையில் நெடிய திருமேனியைக் கொண்டு அவர் திகழ்கிறார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் ஸ்ரீசௌம்யநாத ஸ்வாமிக்கு திருமஞ்சனம் நடை பெறுகிறது. பக்தர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறை வேற கருவறையைச் சுற்றி 9 அல்லது 108 முறை வலம் வருகிறார்கள். மூலவருக்கு வலப்புறம் தனிச்சன்னதியில் தாயார் ஸ்ரீசௌம்ய லக்ஷ்மி என்ற திருநாமத்தோடு பின்னிரு திருக்கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தி முன்னிரு திருக்கரங்களில் அபய வரத ஹஸ்தமாக அருள்பாலிக்கிறார். வெள்ளிக்கிழமை தோறும் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது. ஸ்ரீயோக நரசிம்மருக்குத் தனிச் சன்னதி உள்ளது.

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரி யில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலகப் பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப்படுத்தவும். மேலும், chiefeditortpt@gmail.com எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.




# ஸ்ரீபராங்குச நம்பி

## (எம்பார் தம்பி சிறிய கோவிந்தப்பெருமாளின் திருக்குமாரர்)

- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

இராமாநுசருடைய சிற்றன்னையின் இரண்டாம் பிள்ளையும், எம்பாரின் திருத்தம்பியாருமான சிறிய கோவிந்தப்பெருமாளின் குமாரர் பராங்குச நம்பி. ஆளவந்தாரின் மூன்று ஆசைகளை நிறைவேற்றுவதற்காக ஸங்கல்பம் செய்த இராமாநுசர் மூன்றாவது ஆசையான ஒரு சிறந்த வைஷ்ணவ குழந்தைக்கு நம்மாழ்வாருடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்று எண்ணி, இவருக்கு பராங்குச நம்பி என்று பெயரிட்டார். பராங்குச நம்பி 74 ஸிம்மாஸனாதிபதிகளில் ஒருவராவர். இவர் மாசி மாதம் அசுவிநீ நக்ஷத்ரத்தில் காஞ்சீபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள மதுரமங்கலத்தில் அவதரித்தார்.

மருவாரும் மழலைநகர் வாழவந்தோன் வாழியே
மாசிதனில் அசுவதி நாள் வந்துதித்தான் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் குறை தீர்த்தான் வாழியே
சீர் திருமலைநம்பி தன்னைச் சிந்தனை செய்வோன் வாழியே
பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பதின்மர் கலை உட்பொருளைப்பகருமவன் வாழியே
ஏராரும் எம்பாரின் இணை அடியோன் வாழியே
எழில் இளைய கோவிந்தனார் இணையடிகள் வாழியே.

### பதவுரை

மருவாரும் – மணம் நிறைந்த, மழலைநகர் – மதுரமங்கலம் என்ற ஊர், வாழ வந்தோன் – நிலை பெற்று வாழ வந்தவர் வாழ வேண்டும். மாசிதனில் – மாசி மாதத்தில், அசுவதிநாள் – அசுவிநீ நக்ஷத்ரத்தில், வந்துதித்தான் – வந்து அவதரித்தவர். தெருளாரும் – திவ்ய ஞானம் நிறைந்த, ஆளவந்தார் – ஆளவந்தார் என்னும் ஆசார்யருடைய, குறை – விருப்பத்தை, தீர்த்தான் – தீர்த்தவர். சீர் திருமலை நம்பி தன்னை – பெருமை பொருந்திய திருமலை நம்பி என்னும் ஆசார்யரை, சிந்தனை செய்வோன் – சிந்தனை செய்பவர். பாராரும் எதிராசர் – பெருமை பொருந்திய இராமாநுசர், பதம் – திருவடிகளை, பணிந்தோன் – பணிந்தவர். பதின்மர் கலை – பத்து ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களின், உட்பொருளை – உள்ளார்ந்த பொருளை, பகருமவன் – விளக்குபவர். ஏராரும் எம்பாரின் – அழகு நிறைந்த தம் பெரிய தகப்பனாரான எம்பாரின், இணை அடியோன் – திருவடிகளைப் பற்றினவர். எழில் இளைய கோவிந்தனார் – அழகு நிறைந்த கோவிந்தனார், இணை அடிகள் வாழியே – இரண்டு திருவடிகள் பல்லாண்டு வாழ வேண்டுவோமாக.

*(மருவாரும் மழலைநகர் வாழவந்தோன் வாழியே)* – மரு – மணம், வார்தல் – நிறைதல். மணம் நிறைந்த மழலைநகர். மழலைநகருக்கு மணமாவது இராமாநுசருடைய சிறியதாயாரின் முதல் புதல்வரான சிறுமாமனிசரான எம்பார் அவதரித்தமை ஆகும். மழலைமங்கலமாக இருந்த இவ்வூர் காலப்போக்கில் மதுரமங்கலமாக மருவி இருப்பதாகக் கூறப்படுகிறது. இராமாநுசர் பிறந்து 9 ஆண்டுகள் கழித்து அவதரித்தவர் எம்பார் ஆவர். கமலநயனபட்டருக்கும் ஸ்ரீதேவி பிராட்டிக்கும் பிறந்தவர் வட்டமணிக்குலத்தவரான கோவிந்தப் பெருமாளும், அவர் தம்பி சிறிய கோவிந்தப் பெருமாளுமாவர். அத்தகைய சிறப்பு பெற்ற மழலைமங்கலத்தில்எப்போதும் இவ்விருவர்களைக் கொண்டாடும் பாக்கியம் பெற்றமையால் வந்த சிறப்பு உடையதாகும். மேலும், இந்த ஆன்மீக சிறப்பு வாய்ந்த கிராமத்தில் பழமையான ஸ்ரீவைகுண்ட பெருமாள் எழுந்தருளி அருள்பாலிப்பது சீர்மை உடையதாகும். இத்தகைய மகிமை பொருந்தியவராய், வாழவந்தவருமான சிறிய கோவிந்தப் பெருமாள் குமாரர் வாழவேண்டும்.

*(மாசிதனில் அசுவதி நாள் வந்துதித்தான் வாழியே)* மாசி – தமிழ் வருடத்தில் பதினோராம் மாதம் மாசிமாதமாகும். இருபத்தேழு நக்ஷத்ரங்களுள் முதன்மையானது அசுவிதி அல்லது அசுவிநீயாகும். இம்மாதம், புனர்வசு நக்ஷத்ரத்தில் குலசேகராழ்வார் அவதரித்த பெருமையுடையது ஆகும். ஜீயர் நாயனார் அருளிய நக்ஷத்ர மாலிகையில் (1) "அச்வயுஜ:" என்று அசுவிநீ நக்ஷத்ரத்தைக் குறிக்கும் வகையில் ஆழ்வாருடைய முத்ராலங்காரத்தைக் குறிக்கிறது என்பர். அத்தகைய பெருமையுடைய நாளில் பிறந்த பராங்குச நம்பிக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*(தெருளாரும் ஆளவந்தார் குறை தீர்த்தான் வாழியே)* – ஆளவந்தாரை ஸேவிக்க பெரிய நம்பிகளுடன் இராமாநுசர் திருவரங்கம் சென்றபோது, வடதிருக்காவிரியிலேயே ஆளவந்தார் பரமபதம் அடைந்ததைக்கேட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் திரண்டு இருந்ததை அறிந்து, பின்னர் அருகில் அவரைக்காணும்போது அவருடைய திருவிரல்கள் மூன்று மடங்கி



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

87. *"ஜயந்து திவ்யஸூரய: ததா ததீய ஸூக்தய: ஜயந்து தோஷலேசத: விஹீநதேசகாஸ்ஸமே ஜயந்து ஸப்தலோகக ப்ரபந்நஜீவநாயதை: ஜயந்து நிர்மிதா: கலா ஸஹ சுருதிப்ரமாணகை:"* – இந்த ஸம்ஸ்க்ருத சுலோகத்துக்கு பொருளில் ஸமானமாக உள்ள உபதேசரத்னமாலை பாசுரம் எது?

உபதேசரத்னமாலை மூன்றாவது பாசுரம் –*"ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி; தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி; ஏழ்பாரும் உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி; செய்யமறை தன்னுடனே சேர்ந்து".*

88. பிள்ளைலோகாசார்யர் அவதரித்த திருவவதார ஸ்தலம், மாஸம், திருநக்ஷத்ரம், ஆசார்ய திருவடி சேர்ந்த ஸ்தலம் எது?

அவதார ஸ்தலம் – ஸ்ரீரங்கம், மாஸம் – துலா மாஸம் (ஐப்பசி), திருநக்ஷத்ரம் –சிரவணம், திருநாடு அலங்கரித்த ஸ்தலம் – ஜ்யோதிஷ்குடி (மதுரை அருகில்).

89. ஸ்ரீரங்கத்தில் உடையவருக்கு தளிகை பண்ணி பிரசாதம் ஸமர்ப்பிப்பதற்கு திருக்கோட்டியூர் நம்பி மூலமாக நியமிக்கப்பட்ட ஆசார்யர் யார்?

கிடாம்பியாச்சான்.

90. எழுபத்து நான்கு ஸிம்ஹாஸனாதிபதி ஆசார்ய புருஷர்களில் ஒருவரான கொங்கில் ஆச்சான் ஸஹதர்மசாரிணியான ராமாநுஜதாசி யார்?

கொங்குபிராட்டியார்.

– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.
தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.

இருந்ததையும் காட்டினர். அதற்குக்காரணமான ஆளவந்தாருடைய மூன்று மனக்குறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு இராமாநுசர் தாம் தீர்ப்பதாக அப்போது சபதம் செய்தார். அதில் மூன்றாவது குறையைத் தீர்க்கும் வகையில் இராமாநுசர் எம்பாரின் தம்பியான சிறியகோவிந்தப் பெருமாளுக்கு ஒரு குமாரர் பிறந்ததை அறிந்து உகந்து இராமாநுசர் ஆளவந்தார் க்ருஷி பலிக்கப்பெற்றதே என்று அவர் திருமாளிகைக்குச் சென்று, அவர் குமாரரையும் அன்போடு குளிரக் கடாக்ஷித்து, அக்குமாரருக்கு ஸ்ரீபராங்குச நம்பி என்று நம்மாழ்வார் திருநாமத்தை இட்டு ஆளவந்தாருடைய மூன்றாமிழவையும் தீர்த்தார். இதனை

கோவிந்தராஜாந்வயஜோ மநீஷீ பராங்குச
யாமுநவைமநஸ்யம்।
அபாசகார ப்ரஸபம் த்ருதீயம் விராஜதே வ்ருத்தமணி ப்ரதீப:॥

கோவிந்தராஜரின் வம்சத்தில் பிறந்தவராய், நல்ல அறிவுடைய பராங்குசபட்டர், ஆளவந்தாருடைய மூன்றாம் குறையை அடியோடு போக்கினார். ஆகையாலே வட்டமணிக் குலத்துக்கு விளக்காக விளங்கினார் என்று லக்ஷ்மீகாவ்யத்தில் சொல்லப்பட்டது காண்க. எனவே ஆளவந்தார் நினைவை பூர்த்தி செய்யும் வகையில் பெயர் பெற்ற பராங்குச நம்பி பல்லாண்டு வாழ வேண்டும்.

*(சீர் திருமலைநம்பி தன்னைச் சிந்தனை செய்வோன் வாழியே)* எம்பாரின் அம்மானான திருமலை நம்பிக்கு சீர்மையாவது ஆளவந்தார் நியமனப்படி திருமலைக்கு எழுந்தருளி ஆகாச கங்கையிலிருந்து தினந்தோறும் திருமஞ்சனம் கொண்டு வந்து ஸமர்ப்பித்து மலையப்பனை மகிழ்வித்தல், இராமாநுசருக்குத் திருமலையில் இருந்து தினந்தோறும் இறங்கி வந்து அடிவாரத்தில் ஸ்ரீராமாயண ரஹஸ்யார்த்தங்களை ஒரு வருட காலம் உபதேசித்தல் ஆகிய கைங்கர்யத்தைக் கூட இருந்து சிந்தனை செய்தவர் பராங்குச நம்பியாவர். இப்படி சிந்தனை செய்வோன் வாழ பல்லாண்டு பாடுவோமாக.

*(பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே)* பெருமை பொருந்திய எதிராசர் இவருக்கு பராங்குச நம்பி என்று பெயரிட்டதனால் அவர்தம் சீடரானபடி. மேலும், இராமாநுசர் பதம் பற்றின 74 ஆசார்யர்களுள் 65வது ஆசார்யர் இவர். இவ்வாறு எதிராசர் பதம் பற்றின நம்பியை வாழ்த்துவோமாக.

*(பதின்மர் கலை உட்பொருளைப் பகருமவன் வாழியே)* பொய்கையாழ்வார் முதல் திருமங்கை ஆழ்வார் ஈறாக பதின்மர் அருளிய கலையான திவ்ய ப்ரபந்தத்தின் உட்பொருளான திருமந்த்ரம், துவயம், சரமசுலோகம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர் பராங்குச நம்பி. "பாலேய் தமிழர் இசைகாரர் ....." (1-5-11) என்ற நம்மாழ்வார் பாசுரத்தில் பாலேய் தமிழர் என்பதற்கு ஒரு முறை கூரத்தாழ்வான் ஸ்ரீபராங்குச நம்பியைப் பாலேய் தமிழர் என்கிறது என்று அருளியது காண்க. இவ்வாறு பிரபந்தத்தின் உட்பொருளைப் பகருமவரான நம்பி வாழ வேண்டும்.

*(ஏராரும் எம்பாரின் இணை அடியோன் வாழியே)* இராமாநுசரின் பதச்சாயையாகத் திகழ்வதாகிய அழகு நிறைந்தவர் எம்பார், அந்த எம்பாருடைய திருத்தம்பியின் குமாரரான பராங்குசநம்பி எம்பாருக்கு இணையடியாகத்திகழ்பவர். அத்தகைய ஆசார்யர் வாழ வேண்டும்.

*(எழில் இளைய கோவிந்தனார் இணையடிகள் வாழியே)* தம்முடைய பெரிய தகப்பனாரான எம்பாரின் எழிலைக் கொண்டிருப்பதனால் இளைய கோவிந்தனார் என்று சொல்லும்படியான நம்பிகள் இணையடிகளுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்...

**பிழைத்திருத்தம் : 2026, ஜுன் மாத இதழில் பக்கம் 46ல் ஜுலை மாத பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள் பட்டியலை கீழ்க்காணும்படி திருத்தி வாசிக்கவும்.**

| | |
|---|---|
| 05-07 | திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம். |
| 16 | பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை. |
| 17 | திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம். |
| 17-19 | ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம். |
| 24-26 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம். |
| 25 | சயன ஏகாதசி. |
| 25-28 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 26 | துளசி மாகாத்மியம். |
| 29 | குரு பௌர்ணமி, வியாச பௌர்ணமி. |

# சீலம் எல்லை இலான்

- பெருமாள் கோவில்
திருமலை விஞ்சமூர்
ஆராவமுதன்,
திருவல்லிக்கேணி

**வே**தவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
*வேத: ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மந:॥*

வேதவேத்யனான எம்பெருமான் ஸ்ரீராமன் தாஸரதியாய் இக்ஷ்வாகு குலத்தில் அவதரிக்க, அந்த எம்பெருமானைப் போற்றும் வேதமானது ஸ்ரீராமாயணமாக அவதரிக்கிறது.

வேதமே ஸ்ரீராமாயணம் என்று இந்த சுலோகம் தெரிவிக்கிறது. வேதத்தில் உள்ள கருத்துக்களை எம்பெருமானின் கல்யாணகுணங்களை ஸ்ரீராமாயணத்தால் லோக ப்ரஸித்தமாகக் காட்டியுள்ளவாறே ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தமிழிலும் மற்ற க்ரந்தங்களிலும் விவரமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

*தர்மஜ்ஞ: ஸத்யஸந்த: ச ஸீலவாந் அநஸூயக:*
*ப்ரியவாதீ ச பூதாநாம் ஸத்யவாதீ ச ராகவ: ।*
*பஹுஸ்ருதாநாம் வருத்தாநாம் ப்ராஹ்மணநாம்*
*உபாஸிதா ॥*

வால்மீகி முனிவர் முதலில் முதல் ஸர்கத்தாலே (அயோத்தியா காண்டம்) இராமனுடைய குணத்தைச் சொல்கிறார். ஸ்ரீராமனுடைய குணங்களைப் பற்றி ப்ரஜைகள் சொல்வதாக அமைந்துள்ளது இந்த சுலோகம்.

வேதவாக்யமான *"ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம''* போன்ற எம்பெருமானின் குண நிருபகமாக இருக்கின்ற வேத வாக்யங்களுக்கு ஸ்ரீராமனுடைய திவ்ய கல்யாண குணங்கள் ஸ்ரீராமாயணம் என்ற மஹா காவ்யத்தில் ஸாக்ஷியமாக அமைகிறது.

*இக்ஷ்வாகுப்யோபி*
*ஸர்வேப்ய: ஹ்யதிரிக்*
*தோ விசாம்பதே*
*ராம: ஸத்புருஷோ*
*லோகே ஸத்ய தர்ம*
*பராயண:*
*ஸாக்ஷாத் ராமாத்*
*விநிர்வ்ருத்தோ தர்மச்*
*சாபி ச்ரியா ஸஹ*
*ப்ரஜா ஸுகத்வே*
*சந்த்ரஸ்ய வஸுதாயா:*
*க்ஷமாகுணை:*

இக்ஷ்வாகு வம்சத்தில் இருந்த எல்லா ராஜாக்களைக் காட்டிலும் ஸ்ரீராமன் உயர்ந்தவர், எப்பொழுதும் குளிர்ந்த சந்திரன் போன்று எல்லா ப்ரஜைகளுக்கும் காட்சியளிப்பவர்.

ஸ்ரீராமன் நல்ல சீலம் படைத்தவர். ஆஸூயையே படமாட்டார். சாஸ்த்ர வல்லுநர்கள் இடையே ஸ்வானு பவ்யத்தோடே திகழ்ந்தார்.

*பஹவோ ந்ருப: கல்யாணகுணா:*
*புத்ரஸ்ய ஸந்தி தே:*

அயோத்யா நகரத்துப்ரஜைகள் தசரத மஹாராஜாவிடம் "உன்னைக் காட்டிலும் சிறந்த குணவாளனான ஸ்ரீராமனுக்கு உடனே பட்டாபிஷேகம் செய்" என்கிறார்கள். மேலே சொல்லப்பட்ட ஸம்ஸ்க்ருத சுலோகத்தின் அர்த்தங்களைக் கொண்டே நம்மாழ்வார் தம்முடைய திருவாய்மொழி ப்ரபந்தத்தில்,

*கற்பார் இராமபிரானையல்லால் மற்றும்*
*கற்பரோ*
*புற்பா முதலாப் புல்லெறும் பாதி*
*ஒன்றின்றியே*



*நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்*
*நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற*
*நாட்டுளே* – திருவாய்மொழி 7–5

என்று அருளினார். லோகத்தில் சாதாரண மனிதர்களும் எம்பெருமான் ஸ்ரீராமபிரானின் கல்யாண குணங்களைக் கற்று அநுஸந்திக்க முயலவேண்டும் என்று ஆழ்வார் விவரிக்கிறார். உதாரணமாக ஒரு விவேகி ஸௌசீல்ய குணத்தை அத்யயனிக்க வேண்டும் என்றால் ஸ்ரீராமபிரானைத் தவிர வேறுயாரிடம் செல்வது என்று ஆழ்வார் வினவுகிறார். மேலும், ஆழ்வார் *"வல்வினையேனை ஈர்கின்ற குணங்களை உடையாய் அசுரர் வன்கையர் கூற்றமே. கொடிய புள்ளுயர்த்தாய்"* என்கிறார் (திருவாய்மொழி 8.1.8). வேதத்தில் இதிஹாஸ புராணங்களில் சொல்லி உள்ள பகவானின் கல்யாண குணங்களும் ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமனுக்கு அமைந்து உள்ளனவாகவே ஆழ்வார்கள் அவர்களுடைய திவ்ய ப்ரபந்தங்களில் பல இடங்களில் எடுத்துக் காட்டி உள்ளனர். பகவானுக்கு தயை என்கிற குணம், ஆச்ரித வாத்ஸல்யம், ஆச்ரித பாரதந்த்ர்யம், ஸௌஸீல்யம் ஆகிய கல்யாண குணங்கள் எப்பொழுதும் உண்டு.

## ஸ்ரீராமனின் சீலகுணம்

ஸ்ரீமந்நாராயணனே இராமபிரானாக திருவவதாரம் செய்தமை பற்றி ஸ்ரீகூரத்தாழ்வான் தன்னுடைய பஞ்ச ஸ்தவமான அதிமாநுஷஸ்தவம் 10வது சுலோகம் *"சீல: க ஏ ஷெ: தவ ஹந்த"* – "அந்தோ இது எத்தகைய சீலகுணம்! இதை எடுத்துப் பேச யாரால் முடியும்!" என்று தொடங்குகிறார். அந்த ஸீல குணத்தை எது கொண்டு நிரூபிக்கிறார் எனில் *"அத்ராவதீர்ய நநு லோசநகோசரோபு:"* என்பது அந்த ச்லோகத்தின் உயிரான வார்த்தை.

கட்கிலியான எம்பெருமான் அஸுர ப்ரக்ருதிகள் இடையே வந்து பிறந்து அவர்களுடைய கட்புலனுக்கு இலக்காகித் திருவவதரித்தார் என்பதை நினைக்கும் போது 'அந்தோ! என்ன சீலம்! குணமறிந்து உகக்க மாட்டாதே எதிரம்பு கோப்பதுஞ் செய்யா நின்ற அரக்கர் அசுரர் போன்ற மனிசரிடையே வந்து பிறக்கின்ற இந்த ஸீல குணத்தை என்னவென்று சொல்லுவது? என்று கூரத்தாழ்வான் உருகுகிறார்.

நம்மாழ்வாரும் தம்முடைய திருவாய்மொழி ப்ரபந்தத்தில் பிறந்தவாறும் என்ற பாசுரம் தோற்றுவித்த போது எம்பெருமானுடைய சீல குணத்தில் ஆறுமாஸம் மோஹித்திருந்தார்.

"கோ குணவாந்" என்ற கேள்விக்கு மஹாசார்யர் ஆகிய ஸ்ரீ ஆளவந்தார் அவரது ஸ்தோத்திர ரத்னம் என்கிற ச்லோகத்தில் "வசீ வதாந்ய:" என்ற இரண்டு குணங்களைக் கூறினார். அதன்பிறகு "ருஜீ: சுசி" என்கிறார். முடிவில் *"ஸமஸ்த கல்யாண குணாம்ரு கோததி"* என்று கூறினார். ஸௌசீல்ய குணம் என்று பூர்வாசார்யகள் திருவுள்ளம் பற்றியுள்ளார்கள். தன்மேன்மை பாராது தாழ்ந்தவரோடும் புரையறப்பரிமாறும் கலக்கும் சீல குணத்திற்கே "ஸௌசீல்யம்" என்றார்கள். வால்மீகியின் "கோ குணவாந்" என்ற கேள்விக்கு ஸ்ரீராமபிரானே என்று நாரத மஹரிஷி பதிலளித்தார். அந்த சீல குணம் உடைய ஸ்ரீராமனை திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி என்கிற திவ்யப்ரபந்தத்தில் அருளிச் செய்கிறார்:

*ஏழையேதலன் கீழ்மகன்*
*என்னாது இரங்கி*
*மற்றவற்கு இன்னருள் சுரந்து*
*மாழைமான் மடநோக்கி உன்தோழி*



*உம்பி எம்பியென்று ஒழிந்திலை உகந்து*
*தோழன் நீ எனக்கு இங்கொழியென்ற*
*சொற்கள் வந்து அடியேன் மனத்திருந்திட*
*வாதமாமகன் மர்க்கடம் விலங்கு*
*மற்றோர் சாதியென் றொழிந்திலை உகந்து*
*காதலாதரம் கடலினும் பெருகச் செய்*
*தகவினுக்கு இல்லை கைம்மாறென்று*
*கோதில் வாய்மையினாயொடும் உடனே*
*உண்பன் நானென்ற ஒண்பொருள் எனக்கும்*
*ஆதல் வேண்டுமென்று*

என்று குணானுபவம் பண்ணுகிறார் (5–8–1), (5–8–2). இக்ஷ்வாகு வம்ஸத்தில் தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரனும், ஸகல ஐஸ்வர்ய ஸம்பந்தனும், மஹாபுத்திமானும், பகைவரிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குகனை நோக்குங்கால் இவன் வேடன், அவிவேகி, கொடுமையுடையவன், பகைமை கொள்பவன் என்னும் படியான தன்மைகளைக் கண்டு இகழ்ச்சி கொள்ளாமல், தனது விசேஷ குணங்களையும் அவனது தாழ்ந்த தன்மைகளையும் பாராமல் அவனிடம் ஸ்ரீராமன் கலந்து பரிமாறின எளிமை எத்தகையது!.

***''கூரணிந்த வேல் வலவன் குகனோடும் கங்கைதன்னில் சீரணிந்த தோழமை கொண்டதும் ஓர் அடையாளம்''*** என்று பெரியாழ்வார் (பெரியாழ்வார் திருமொழி ப்ரபந்தம் 3–10–4) ஸ்ரீராமனுடைய குணத்துக்கு அடையாளம் கூறுகிறார்.

இதையே குகன் வரும்போதே இராமனைத் தழுவிக்கொண்டதாகவும் சொல்லுவார்கள். ***''தம் ஆர்த்தஸ் ஸம்பரிஷ்வஸ் வஜ்ய குஹோ ராகவமப்ரவீத்''*** என்றும், ***''தத்ர ராஜா குஹோ நாம ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா''*** என்றும் வால்மீகி கூறுகிறார்.

***''ராம: டு ரமதே''*** என்பதற்கு "உள்ளம் குளிரப் பெறுபவர்'' என்பதும் பொருள். அன்பர்களோடு கலக்கப் பெற்றும் அன்பர்களின் காரியத்தை தலைக்கட்டியும் உள்ளம் குளிருபவர் ஸ்ரீராமன். ***''குஹேந ஸஹிதோ ராம:''*** ஸ்ரீராமன் குகனோடு சேர்ந்தான் என்று இதற்கு பொருளன்று; ***''குஹேந ஸஹிதஸ் ஸந்ராம:''*** குகனோடு சேர்ந்த பின்பு இராமன் ஆனான் என்றே ஆசார்யர்கள் அருளிச் செய்தார்கள். குகனோடு சேர்ந்து உள்ளம் குளிர்ந்தானென்கை.

தொடரும்...

## இரதயாத்திரையில் ஸ்ரீஜெகந்நாதர்...

அருள்மிகு ஜெகந்நாதர் கோயில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் ஒடிசா மாநிலத்தில் பூரி என்னும் கடற்கரை நகரத்தில் அமைந்துள்ள வைணவத் திருக்கோயிலாகும். இக்கோயில் ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயிலாகும். முகம் மற்றும் கைகளை மட்டுமே காணும் வகையில் அமைந்த இக்கோயிலின் மூலவர்களான ஜெகந்நாதர், பலபத்திரர் மற்றும் சுபத்ரையின் திருமேனிகள் மரத்தால் ஆனவை. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இம்மூலத்திருமேனிகள் உரிய சடங்குகளுடன் புதிய மரத்தால் செதுக்கி அமைக்கப்படும்.

இக்கோயில் 12ஆம் நூற்றாண்டில் கீழைக்கங்கர் குல அரசன் ஆனந்தவர்மன் சோடங்கனால் கட்டப்பட்டது. இக்கோயிலின் மூலவர்களான ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை தனித் தனியாக மூன்று தேர்களில் ஏறி திருவலம் வரும் நிகழ்வான ரத யாத்திரைத் திருவிழா ஆண்டிற்கு ஒருமுறை ஆடி பௌர்ணமி அன்று துவங்கி ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவில் நாடெங்கிலிருந்தும் இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து கலந்து கொள்கின்றனர். தேரோட்டத் திருவிழாவை முன்னிட்டு 16 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, மஞ்சள் நிறத் தேரில் ஜெகந்நாதர், 14 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, பச்சை நிறத்தேரில் பலராமர், 12 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, கருப்பு தேரில் சுபத்ரா எழுந்தருள்வர்.



பாரம்பரிய வழக்கப்படி தேரோடும் ரத்ன வீதியை தங்கத் துடைப்பத்தால் பூரி மன்னர் பெருக்கி சுத்தம் செய்வார். முதலில் பலபத்திரர் தேரும், அதன்பின்னர் சுபத்ரை தேரும் புறப்பட்ட பின்னர் இறுதியாக ஜெகந்நாதர் எழுந்தருளிய தேர் புறப்படும்.

குண்டிச்சா கோயிலை நோக்கிச் செல்லும் ரதயாத்திரையின் ஒரு பகுதியாக வழியிலுள்ள மவுசிமா கோயிலில் ஓய்வு எடுப்பார். பின்னர் தேர்கள் அங்கிருந்து புறப்பட்டு பூரி ஜெகந்நாதர் கோயிலை வந்து அடையும். தேரோட்டத்திற்காக ஆண்டு தோறும் 45 அடி உயரமும் 35 அடி அகலமும் கொண்ட புதிய தேர் மரத்தால் செய்யப் படுகிறது.



# ஜீலை 2026 ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுபச் செலவுகள் நடக்கும். ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் வளர்ச்சிக்காகச் செலவுகள் அதிகமாகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. விரும்பிய இடத்தில் இடமாற்றம் கிடைக்கும். மொத்தத்தில் நல்ல யோகமான மாதமிது.

**ரிஷபம்**

தொழிலில் நல்ல வளர்ச்சியும், எதிர்பார்த்த லாபமும் உண்டு. குடும்பத்தில் எதிர்பார்த்த பண வரவு உண்டு. நல்ல ஆரோக்கியம் உண்டு. உத்தியோகஸ்தர் களுக்குப் பதவி உயர்வு உண்டு. மாணவர்களுக்கு எதிர் பார்த்த நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். தாராளப் பணப்புழக்கம் உண்டு. நல்லோரின் நட்பு உண்டு. வெற்றி மேல் வெற்றி பெறும் இனிய மாதம் இது.

**மிதுனம்**

புத்திசாலித்தனமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர். வேலைப்பளு அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும். மூத்த சகோதரருக்கு செலவுகள் அதிகமாகும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்கள் பெறுவர். குறிப்பிட்ட முன்னேற்றம் தரும் மாதம் இது.

**கடகம்**

செலவுகள் குறையும். தொழிலில் வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தா ருடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். தம்பதியிடையே இருந்த பிரச்சனைகள் தீரும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

**சிம்மம்**

மாதத்தின் பின் பாதியில் செலவு அதிகமாகும். தொழில் அலைச்சலால் தூக்கம் குறையும். மூட்டு வலி உண்டாகும். தம்பதியிடையே கருத்து வேறுபாடு உண்டாகும். புது தொழிலில் தாமதமாக வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கடுமையாக படித்தல் வேண்டும். தொழிலில் கஷ்டப்பட்டு முன்னேறுவீர்கள். கல்விக்காக செலவுகள் அதிகமாகும். கடுமையான உழைப்பில் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

தொழிலில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குழந்தை பாக்கியம் விரைவில் கிடைக்கும். திருஷ்டியால் சிறு தடைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். மனைவிக்கு மூட்டு வலி உண்டாகும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் சரியாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல முன்னேற்றமான இனிய மாதம் இது.

**துலாம்**

தொழிலில் மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் கிடைக்கும். மனைவியின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. நினைத்த காரியங்கள் தாமதமாக நடக்கும். புது முயற்சிகளில் வெற்றி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்கிய குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். விரைவில் திருமணம் கைகூடும். இம்மாதம் முன் பாதியை விட பின்பாதியில் நன்மைகள் உண்டு. குழந்தை இல்லாதவர்களுக்கு விரைவில் மருத்துவம் செய்யாமலேயே குழந்தை பிறக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிடைக்கும் மாதம் இது.

**தனுசு**

ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வீடு அல்லது தொழில் செய்யும் இடம் மாற வேண்டி இருக்கும். பண விஷயத்தில் அக்கறை தேவை. கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் முற்றிலுமாகத் தவிர்க்கவும். மாணவர்கள் சற்று குறைவான மதிப்பெண் கள் பெறுவர். புதிய முயற்சிகளில் எச்சரிக்கை தேவை. மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம் இது.

**மகரம்**

பணப் பிரச்சனைகள் தீரும். விரைவில் திரும ணம் கைகூடும். குழந்தை பாக்கியம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குடும்பப் பிரச்சனைகள் தீரும். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். விரைவில் பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பிரச்சனைகள் தீர்ந்து நன்மை பெறும் மாதம்.

**கும்பம்**

தொழிலில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. கடன் வாங்கி வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். தாராளப் பணப்புழக்கம் உண்டு. குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத்திற்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. வளர்ச்சியுடன் கூடிய மாதம் இது.

**மீனம்**

உடல் வலிகளால் ஏற்பட்ட தொல்லைகள் தீரும். புதிய முயற்சிகளில் காலதாமதம் ஆனாலும் வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். விரைவில் திருமணம் நடக்கும். குழந்தை பாக்கியம் உண்டு. வேலைக்கேற்ற வருமானம் கிடைக்கும். படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். மொத்தத்தில் நல்ல யோகமான மாதம் இது.

மணம் (வாசனை) என்பது மனித உணர்வுகளில் மிகவும் வலிமையானது. வாசனை என்பது நம்மைச் சுற்றியுள்ள பொருட்களின் நறுமணம் அல்லது நாற்றத்தை மூக்கின் நுகர்வு நரம்புகள் மூலம் உணரும் ஒரு புலனாகும். காற்றில் கலக்கும் மூலக் கூறுகள் மூக்கின் துவாரங்கள் வழியாகச் சென்று, அங்குள்ள நுகர்வு ஏற்பி உயிரணுக்களால் (Olfactory receptor cells) கண்டறியப்படுகின்றன

பிறந்த குழந்தையினிடத்தும் மணமுண்டு, நல்ல வஸ்துக்களான புஷ்பம், சுவையான உணவு, வாசனை திரவியங்கள், மழை பெய்யும் முன் ஏற்படும் வாசனை, மழையினால் ஏற்படும் மண் வாசனை போன்ற பல ரசிக்கத்தக்க வாசனை போலவே, துர்நாற்றம் என்று உணரப் படும் கழிவு நீர், கெட்டுப் போன உணவு, அழுகிய காய்கறி போன்ற அனைத்தும் மணம் என்ற ஒற்றை சொல்லில் ஒளிந்திருக்கும். மணம்/வாசனை என்ற இந்த அற்புதமான விஷயத்தை உணர்வது நுகர்வு உணர்வு என்பதாகும். இந்த மணம் இயற்கையாக வும் அமையப் பெற்றிருக்கும், செயற்கையாகவும் அமைந்திருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக இலக் கியத்தில் ஒரு சிறப்பான பகுதியைப் பார்ப்போம்.

தமிழ் இலக்கியத்தில் மணத்தை (வாசனை) வர்ணிக்கும் பல பாடல்கள் உள்ளன. குறிப்பாக, சங்க இலக்கியத்தில் தலைவியின் கூந்தல் மணம், இயற்கையின் மணம் போன்றவையாகப் போற்றப் பட்டுள்ளன. புகழ்பெற்ற ஒரு பாடல் திருவிளையாடல் புராணத்தில் வரும், தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் குறிப்பிடப்படும் பாடல்.

*கொங்குதேர் வாழ்க்கையஞ் சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழிஇய நட்பின் மயிலியல்*
*செறியெயிற்றரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோ நீ அறியும் பூவே?*

– குறுந்தொகை

மலர்களில் மகரந்தங்களை எடுத்து வாழும் அழகிய சிறகுகளை உடைய தும்பியே! நீ அறிந்த பூக்களில் என்னுடன் பல பிறப்புகளில் நட்புடன் பழகும் அழகுடைய, அழகிய பற்களை உடைய பெண்ணின் கூந்தலை விட மணமுடையது ஏதேனும் உள்ளதோ? எனக்குப் பிடித்ததைக் கூற வேண்டாம். நீ கற்றறிந்ததைக் கூறு!

இப்பாடல் இயற்கையான மணம் மற்றும் செயற்கையான நறுமணத்தைப் (வாசனை) பற்றி, தலைவியின் கூந்தல் மணம் குறித்து வினவும் நுட்பமான இலக்கிய வரிகளாகும்.

நுகர்வு உணர்வு ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில் அது ஒரு முதன்மைப் பாதுகாப்பு எச்சரிக்கை அமைப்பாகச் செயல்படுகிறது, ஊட்டச்சத்து உட்கொள்ளலை உறுதி செய்கிறது, மேலும், மனநலம் மற்றும் நினைவாற்றலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது புகை அல்லது வாயு போன்ற ஆபத்துகளைக் கண்டறிய



# மனதின் ஆரோக்கியம் மணம் தருமா?

உதவுகிறது, உணவை ரசித்து உண்பதில் செல்வாக்கு செலுத்துகிறது, மற்றும் மூளையின் உணர்ச்சி மையங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. இதன் இழப்பு மனச்சோர்வு மற்றும் நரம்பு சிதைவு நோய்கள் போன்ற குறிப்பிடத்தக்க அபாயங்களுடன் தொடர்புடையது.

சுவைகளை உணர்வதில் நுகர்வுத் திறன் பெரும் பங்கு வகிக்கிறது. எண்ணிப் பாருங்கள் அன்பர்களே! இறைவனின் படைப்பில் ஒவ்வொரு பூ, காய், கனி, உணவு பதார்த்தங்கள் என அனைத்திற்கும் பிரத்யேக மணம் உண்டு. செண்பகப் பூவிற்கு என்று ஒரு மணம், மல்லிகை பூவிற்கென்றோர் மணம்—இது போல பற்பல மரங்கள், ஒன்றோடு ஒன்றுக்கு சம்பந்தமே இருக்காது. அவ்வளவு பிரத்யேக மணங்களோடு இந்த வையம் மணம் வீசுகிறது.

நுகர்வுத்திறன் இழப்பு (அனோஸ்மியா) பசியைப் பாதித்து, மோசமான ஊட்டச்சத்து, உடல் எடை இழப்பு, சில சமயங்களில், சுவைக் குறைபாட்டை ஈடுசெய்ய அதிகப்படியான உப்பு உட்கொள்ளலுக்கு வழிவகுக்கும். இதுவே உடலில் பலவிதமான உடல் உபத்ரவங்களுக்கு வழிவகுக்கும். உடல் பலவீனம் மனதின் சக்தியைக் குறைத்து விடுகிறது.

மணம் வீசும் மலர்கள் மனதிற்கு புத்துணர்ச்சியைத் தருகிறது. மனதில் ஏற்படும் புத்துணர்ச்சி நம்பிக்கையைக் கொடுத்து உடலுக்கு வலு சேர்க்கிறது.

### மனதும் மணமும்

நுகர்வு அமைப்பானது, உணர்ச்சிகளையும் நினைவுகளையும் செயலாக்கும் மூளையின் அமிக்டாலா மற்றும் ஹிப்போகேம்பஸ் பகுதிகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. வாசனைகள் சக்திவாய்ந்த உணர்ச்சிப்பூர்வமான எதிர்வினைகளையோ அல்லது நினைவுகளையோ உடனடியாகத் தூண்டி, மனநிலைகளையும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தையும் பாதிக்கக்கூடும்.

வாசனை இழப்பு என்பது அல்சைமர் மற்றும் பார்கின்சன் நோய்கள் போன்ற நரம்பியல் கோளாறுகளுக்கான ஒரு சாத்தியமான ஆரம்ப எச்சரிக்கை அறிகுறியாகும். மேலும், வயதானவர்களிடையே மோசமான வாசனை உணர்வு, மரண அபாயத்தை 46% அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### சமூக மற்றும் உடலியல் ஒழுங்குமுறை

வாசனை சமூகப்பிணைப்பையும் ஈர்ப்பையும் பாதிக்கிறது. மேலும், இனிமையான, இயற்கையான நறுமணங்களை உள்ளிழுப்பது நோயெதிர்ப்பு மற்றும் நாளமில்லாச் சுரப்பி மண்டலங்களைத் தூண்டி, மன அழுத்தத்தைக் குறைத்து, இதய படப்படப்பை குறைத்து, அழற்சியையும் தணிக்கும் என்கிறது ஆய்வுகள்.

பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனின் லீலைகளைப் பாடும்போது, வெண்ணெய் திருடி, விளையாடியதால் அவன் உடலில் ஒட்டியிருந்த புழுதி, வெண்ணெயின் மணத்தை யசோதை வர்ணிக்கும் பாசுரங்கள் மிகச்சிறந்தவை. கங்கை போன்ற பவித்திரமான நறுமணம் மிக்க திருவரங்கனின் புகழைப் பாடும்போது, வாசனை என்ற சொல்லாடல் மூலம் கண்ணனின் திருமேனி வாசனையைச் சிறப்பிக்கிறார் ஆழ்வார். ஆண்டாளும்,

நாறுநறும் பொழில்மா லிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து
பராவிவைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்கார வடிசில்சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்திவை
கொள்ளுங்கொலோ

என்று தொடங்கும் நாச்சியர் திருமொழி பாசுரத்தின் வாயிலாக "மணம் வீசும் திருமாலிருஞ்சோலையில் வீற்றிருக்கும் திருமாலுக்கும்" என்று கூறி அழைப்பதை அறிய முடிகிறது. நாவில்லாத மலர்களும், மணமில்லாத மலர்களும் இறைவனுக்கு சமர்ப்பிக்கக் கூடாது என்று பெரியோர்கள் சொல்வது உண்டு.

### வாசனை குறித்த ஆயுர்வேத கண்ணோட்டம்

மூக்கு என்பது கபத்தின், குறிப்பாக தர்ப்பக கபத்தின் முதன்மையான இருப்பிடமாகும். இது புலன்வழிப் பாதைகளுக்கு மசகுத்தன்மை அளித்து பாதுகாக்கிறது. வாதம், பித்தம் அல்லது கபத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறையும் (அனோஸ்மியா), சிதைந்த (டிசோஸ்மியா) அல்லது பாண்டம் (பாண்டோஸ் மியா) வாசனைக்கு வழிவகுக்கும்.

### நச்சுக்கள் (ஆமா)

செரிமானம் (அக்னி) பலவீனமாக இருக்கும் போது, நச்சுக்கள் உடலில் சேர்ந்து, நாடிகளை

அடைத்துக் கொள்கின்றன. இதனால், வாசனை உள்ளிட்ட புலன் அனுபவங்கள் சீரழியக்கூடும்.

ஆயுர்வேதம், கப தோஷத்துடன் தொடர்புடைய ஒரு முக்கிய உணர்வாக வாசனை (கந்தம்) உணர்வாகக் கருதுகிறது. இது சளியை நிர்வகித்து, நாசிப் பாதையைப் பாதுகாத்து, காற்றை வடிகட்ட உதவுகிறது. ஆரோக்கியமான வாசனை உணர்வு, வலுவான செரிமானத்துடன் தொடர்புடையது; மோசமான செரிமானம் (ஆமா அல்லது நச்சுகள்) உணர்வுகளை மழுங்கச் செய்துவிடும். வாசனை இழப்பு (அனோஸ்மியா) நச்சுகளை அகற்றுவதன் மூலமும், கபத்தை அதிகரிப்பதன் மூலமும் சிகிச்சையளிக்கப்படுகிறது. அதே சமயம் வேம்பு, சந்தனம் மற்றும் மூலிகை நஸ்யம் போன்ற சுத்தப்படுத்தும் மற்றும் குளிர்விக்கும் மருந்துகள் மூலம் இயற்கையான உடல் துர்நாற்றங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### உடல் துர்நாற்றத்தை (அசாதாரண வாசனையை) நிர்வகித்தல், சுத்தப்படுத்தும் குளியல்

பாக்ட்ரீயாக்களை அகற்றவும், இயற்கையான சுத்தமான நறுமணத்தை அளிக்கவும் குளிக்கும் நீரில் வேப்ப இலைகள், ரோஜா இதழ்கள் அல்லது திரிபலாவைச் சேர்க்கவும். அதிகப்படியான ஈரப் பதத்தை உறிஞ்சுவதற்கும், துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சந்தனம் அல்லது வெட்டிவேர் போன்ற பொடிகளைப் பயன்படுத்துங்கள்.

வாய் துர்நாற்றத்தை எதிர்த்துப் போராட, பெருஞ்சீரக விதைகள், ஏலக்காய், வேப்ப இலை களை மெல்லலாம். உடலின் உள்ளுறுப்புகளில் உள்ள நச்சுக்களைக் குறைக்க,ஹிங்வஷ்டக சூர் ணம் போன்ற செரிமான மூலிகைகளைப் பயன் படுத்தி வாய் துர்நாற்றத்தைச் சரி செய்ய உதவும். இரசாயன டியோடரண்டுகளிலிருந்து ரோஜா நீர் போன்ற இயற்கை நறுமணங்களுக்கு மாறலாம்.

### வாசனை குறைபாடுகளுக்கான இயற்கை வைத்தியங்கள்

ஆயுர்வேத மருத்துவரின் பரிந்துரைபடி நஸ்யம் போன்ற சிகிச்சைகள் நல்ல வாசனை நுகர்வையும், பல சிரோ ரோகங்களையும் போக்கும் தன்மை உடையது. எண்ணெய்களைப் பயன்படுத்துவது நன்மை பயக்கும்; நுகர்வுத் திறனை மேம்படுத்த பிப்பலி, குக்குலு மற்றும் வில்வம் போன்ற மூலிகை கள் பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகின்றன. தடைபட்ட நாடித்துடிப்புகளைச் சரிசெய்ய, வழக்க மான பிராணாயாமம் மற்றும் கபாலபாதி ஆகியவை அத்தியாவசியமானவையாகக் கருதப்படுகின்றன.

புலன்களுக்கு மறுபயிற்சி அளிப்பதற்காக, எலுமிச்சை, யூகலிப்டஸ், கிராம்பு போன்ற தீவிரமான வாசனைகளை வேண்டுமென்றே நுகர்வது ஒரு பிரபலமான நுட்பமாகும். சரக சம்ஹிதையின் சூழலில், க்ஹ்ராணா என்பது மூக்கையும், நுகரும் உணர்வையும் குறிக்கிறது. சித்தி ஸ்தானத்தில் (நாசி சிகிச்சை/நஸ்யத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட அத்தி யாயம் 9), அனு தைலம் போன்ற சிகிச்சைகளைப் பயன்படுத்துவது உங்கள் நுகரும் உணர்வு பாதிக்கப் படாமல் கூர்மையாக இருப்பதை உறுதி செய்கிறது என்று ஆசார்ய சரகர் கூறுகிறார்.

சரியில்லாத வாசனை உள்ள இடங்களில் அதிக நேரம் இருப்பதால் மனதளவில் சிரமமும் சரீரத்தில் மூச்சடைப்பு, மூச்சுதிணறல் போன்ற உயிர் பிரச்சனை ஏற்படுத்தும். மணமான வஸ்துக்களை நுகர்வதும், நல்வாசனையான இடங்களில் பொழுதை கழிப்ப தால் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

*ஆரோக்கிய பாதையில் பயணிப்போம்...*

**ஆயுர்வேத மருத்துவர்**
**டாக்டர்.கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234**

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். 1800-425-4141 க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்




# இறை நம்பிக்கையே வெற்றி தரும்

– திரு. அசோக் ராஜா, அரவக்குறிச்சிபட்டி.
97503 33265

ஒரு வியாபாரி பொருள் மூட்டைகளை கழுதை மேல் ஏற்றி, சந்தையில் விற்க சென்றார். அங்கே பொருட்கள் விற்றுத் தீர்ந்தன. வியாபாரிக்கு ஒரே மகிழ்ச்சி. சந்தையில் குறைந்த விலைக்கு உப்பு விற்பதை கேள்விப்பட்டார். ஊரில் உப்புத் தட்டுப்பாடு. வாங்கிச் சென்றால், நல்ல விலைக்கு விற்கலாம் என்று எண்ணினார்.

உப்பு மூட்டைகளை வாங்கி கழுதை மீது ஏற்றினார். மீதி பணத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டார். ஊருக்குப் புறப்பட்டார். காட்டுப்பகுதி. மழைத்தூறல் விழத் தொடங்கியது. வேகமாக நடை போட்டார். மழை வலுத்தது. கழுதையுடன் மரத்தடியில் ஒதுங்கினார். கன மழைக்கு மரம் எம்மாத்திரம். கழுதை மீது இருந்த உப்பு மூட்டை கரையத் தொடங்கியது. என் உழைப்பு எல்லாம் இப்படி மழையில் கரைந்து போகிறதே! என்று அழுது புலம்பினார், வியாபாரி.

“இறைவா உழைத்துச் சாம்பாதித்த பணம் இது என்று உனக்குத் தெரியாதா சோதிக்கிறாயே! இரக்கம் இல்லையா உன்னைப் பிரார்த்தனை செய்து கொண்டுதானே புறப் பட்டேன். என் பக்திக்கு நீ கொடுக்கும் மரியாதை இதுதானா” என்று இறைவனைத் திட்டினார். ஒரு வழியாக மழை நின்றது. வேதனையுடன் புறப்பட்டார் வியாபாரி. பொழுது சாயத் தொடங்கியது. குதிரை வரும் குளம்படி சப்தம் கேட்டது. எதிரே குதிரைகள் மீது முகமூடிக் கொள்ளையர்கள்,‘கையில் இருக்கும் பணம், நகைகளைக் கொடு’ என்று துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார்கள். ‘என் உழைப்பு எல்லாம் மழையோடு போய்விட்டது. இது தான் பாக்கி. இதைக் கொடுக்க முடியாது’ என்றான், வியாபாரி.

கொள்ளையர்கள், ‘கடைசி வாய்ப்பு. பணத்தைத் தரா விட்டால் கொன்று விடுவோம் என்று மிரட்டினர். அவர் தருவதாக இல்லை. துப்பாக்கியின் விசையை இழுத்தனர். ‘நடப்பது நடக் கட்டும்’ என்ற முடிவில் கண்களை இறுக மூடிக் கொண்டு நின்றார் வியாபாரி. அது வெடிக்கவில்லை. அது மழையில் நனைந்து நமத்துப் போயிருந்தது. அதற் குள், அங்கே மற்ற வியாபாரிகள் வரும் சத்தம் கேட்க... கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். வியாபாரிக்கு உண்மை புரிந்தது.

“இறைவா உப்பைக் கரைத்து விட்டாய்” என்று கோபப்பட்டேன். “கொள்ளையர்களின் வெடியை நனையச் செய்து, என்னைக் காப்பாற்றத்தான் மழையைப் பெய்வித்தாய் என்று இப்போது உணர்கிறேன். உன் தனிப் பெரும் கருணையைப் புரிந்து கொண்டேன். உமக்கு என் நன்றி!” என்று பக்திப் பரவசத்துடன் கூறினார். இறைவனின் அன்பையும், அருளையும் எண்ணி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

எதை எப்போது நமக்கு கொடுக்க வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். ஏதோ ஒரு காரணம் கருதியே துன்பத்தைக் கொடுக்கிறார்.

அதன்பின் இன்பத்தையும் கொடுக் கிறார். இவ்வுண்மையை உணர்ந்தால், எந்நாளும் நமக்கு நன்மையே. நினைப் பதை முடிப்பது நமது பலம். முடிந்த தையே நினைப்பது நமது பலவீனம்.

## சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

### எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




### சித்திரத்தைப் பாருங்கள் !



### வண்ணம் தீட்டுங்கள் !!



### இந்தச் சிறார்களுக்கு கீழே அமர்ந்து படிக்கும் சிறார்களுடன் இணைந்துப் படிக்க ஆசை. இவர்களுக்குப் பாதையைக் காட்டுங்கள்!



ஐந்து ஐந்தாக கூட்டிக்கொண்டு போய் எண்களை இணைத்து பாருங்கள்!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 0 | 5 | 10 | 9 | 6 |
| | | ↑ | 15 | 15 | 20 | 25 |
| 19 | 28 | 20 | 38 | 10 | 25 | 27 |
| 10 | 40 | 35 | 28 | 35 | 30 | 40 |
| 12 | 30 | 14 | 45 | 40 | 50 | 16 |
| 26 | 34 | 30 | 50 | 55 | 20 | 18 |
| 11 | 15 | 60 | 55 | 24 | 20 | 10 |
| 15 | 70 | 65 | 28 | 15 | | |
| 15 | 75 | 80 | 85 | → | | |











### சித்திரத்தின் ஆதாரமாக ஆலயத்தின் பெயர் மற்றும் உற்சவத்தினைக் கூறுங்கள்!

சிறார்களே, மேலே உள்ள சித்திரங்களைப் பாரர்த்தால் உங்கள் நினைவிற்கு வரும் திருத்தலம் எது? அங்கு எந்த உற்சவம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது?

**விடை :**



ஒடிசா மாநிலத்திலுள்ள பூரி ஜெகந்நாதர் ஆலயம், ரதயாத்திரை




திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-48



## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. உலகம் உண்ட பெருவாயனாக நம்மாழ்வார் யாரை குறிப்பிடுகிறார்........................................................
2. மகாபாரத யுத்தத்தில் சாத்யகி எவருடன் சேர்ந்து போரிட்டான் ...............................................................
3. ஆந்திர மாநிலம் நந்தலூரில் அருள் புரியும் திருமாலின் திருநாமம் ..........................................................
4. பாஹ்லீக தேசத்து அரசனான சோமதத்தனின் மகன் பெயர் .........................................................................
5. ஸ்ரீபராங்குச நம்பியின் அவதார மாதம், திருநட்சத்திரம் ...........................................................................
6. அபிராமி அந்தாதி பாடல்களை அருளிச்செய்தவர் .......................................................................................
7. திருவேங்கடவனின் அபிஷேகத்திற்கு ஆகாச கங்கையிலிருந்து தீர்த்தம் கொணர்ந்தவர் .............................
8. குறிஞ்சி நிலக்கடவுளாகப் போற்றப்படுபவர் .............................................................................................
9. திருச்சானூர் சுந்தர ராஜ ஸ்வாமி அவதார திருநட்சத்திரம் ......................................................................
10. குழந்தைகளை "குன்றென நிமிர்ந்து நில்" என்று கூறியவர் ..................................................................
11. "எமக்காகவன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்" என்று கூறியவர் ......................................................
12. திருச்சாளக்கிராம திவ்ய தேசத்தில் அருள் புரியும் திருமாலின் திருநாமம் ..............................................
13. பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட ஆலகால விஷத்தைப் பருகியவர் ..........................................................
14. குருக்ஷேத்திரப்போரில் ஜயத்ரதன் யாரால் கொல்லப்பட்டான் ..............................................................
15. இராமரை "நடையின் நின்றுயர் நாயகன்" என்று கூறியவர் .....................................................................



## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.07.2026.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



**சக்கரத்தைச் சுற்றுங்கள்!**

**அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!**

- ஏகாதசி அன்று எந்த தெய்வத்திற்கு விரதம் ஏற்பர்
- இரண்டு பக்ஷங்களிலும் 11வது நாள் வரும் திதி
- சாதுர் மாதத்தில் வரும் முதல் ஏகாதசி பெயர்
- ஒரு மாதத்தில், வருடத்தில் எத்தனை ஏகாதசிகள் வருகின்றது
- தண்ணீர் கூட அருந்தாமல் விரதமிருக்கும் ஏகாதசி
- வைகுண்ட வாயில் திறக்கப்படும் ஏகாதசி
- ஏகாதசி விரதம் முடிந்து, உணவருந்தும் திதி
- சாதுர் மாதம் நிறைவடையும் ஏகாதசி பெயர்

## விடைகள்

1) விஷ்ணு மூர்த்தி, 2) ஏகாதசி, 3) முதல்–சயன ஏகாதசி, 4) 2, 24,
5) நிர்ஜல ஏகாதசி, 6) வைகுண்ட ஏகாதசி, 7) துவாதசி, 8) உத்தான ஏகாதசி.

**சித்திரத்தில் காணும் சீடர்களின் குருவின் பெயரோடு ஒப்பிடுங்கள்!**




1) சூரிய தேவர்
2) வசிஷ்டர்
3) துரோணர்
4) சாந்தீபனி
5) குமாரஸ்வாமி
6) விஸ்வாமித்திரர்
7) வால்மீகி
8) வேதவியாசர்
9) நம்மாழ்வார்
10) இராமானுஜர்

விடை :
1) 2, 2)4, 3)1, 4) 3, 5) 10, 6) 9, 7) 3



*உலகைப் புரிந்த புரிதலையும், பகுத்தறிவும் திறனையும் அளிக்கின்றேன். தர்மத்தின் வடிவமாக என்னைக் கூறுவார்கள். பிறருக்கு அன்றாட வாழ்வியல் முறையைப் போதிப்பதும் என் கடமையாகும். பிறரின் மனதில் உள்ள அறியாமை என்னும் இருளை அகற்றி ஞானம் எனும் ஒளியை ஏற்றி வைப்பேன். என்னுடைய அருள் இல்லையெனில் இறைவனின் திருவருள் கூட கிடைக்காது. என்னை முழுமையாக ஏற்றுக் கொள்பவர்கள் பிறவிப் பெருங்கடலை எளிதாகக் கடந்து விடலாம். வாழ்க்கையின் வழிகாட்டியும் நானே...*

*மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...*

விடை : குரு/ஆசிரியர்

சித்திரக் கதை

# குரு தட்சணை

கதை : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு.
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்.




ரகு மன்னனும் குபேரனிடம் பொற்காசுகளைக் கேட்டான். மன்னனின் வேண்டுகோளின்படி குபேரனும் பொன் மழையைப் பொழிவித்தான். அரசனும் கௌத்சுவனை வரவழைத்து...
ஐயா! அனைத்து பொற்காசுகளையும் கொண்டு செல்லவும்.
கௌத்சுவனும் அரசன் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றான்.
அரசே! என் குருவிற்கு தட்சணையாக வழங்க வேண்டிய 14 கோடி பொற்காசுகள் மட்டும் எனக்கு போதும். அந்த அளவிற்கு மட்டுமே நான் எடுத்துக் கொள்கிறேன். அதுதான் தர்மம் ஆகும்.
ரகு மன்னன் கௌத்சுவனிடம்...
எல்லா பொற்காசுகளையும் கொண்டு செல். அவை யாவும் உன்னுடையதே.
கௌத்சுவன் அரசனிடம்...
அரசே! குரு தட்சணையாகத் தங்களிடம் நான் கேட்டது 14 கோடி பொற்காசுகள் மட்டுமே. அதுதான் எனக்கானது. அதுதான் தர்மமும் நியாயமும் கூட.
ரகு மன்னனும் கௌத்சுவனை வாழ்த்தினார்.
ஐயா! உன் வழி தர்ம வழி. நியாயமான வழியும் ஆகும். உன் குரு பக்தியும் மேன்மையானதே.
கௌத்சுவனும் மகிழ்ச்சியோடு குருவிற்கு குரு தட்சணையைச் சமர்ப்பித்தான்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ______________________
(பெரிய எழுத்துக்களில்) ______________________
______________________
______________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

### தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களை யும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



# தாள்ளபாக்கம்
# ஸ்ரீ சென்னகேசவஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 24-07-2026 முதல் 02-08-2026 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 24-07-2026 | வெள்ளி | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 25-07-2026 | சனி | துவஜாரோஹணம் | சேஷ வாகனம் |
| 26-07-2026 | ஞாயிறு | பல்லக்கு சேவை | ஹம்ஸ வாகனம் |
| 27-07-2026 | திங்கள் | பல்லக்கு சேவை | சிம்ம வாகனம் |
| 28-07-2026 | செவ்வாய் | பல்லக்கு சேவை | அனுமத் வாகனம் |
| 29-07-2026 | புதன் | மோகினி அவதாரம் | கருடசேவை |
| 30-07-2026 | வியாழன் | --- | திருக்கல்யாணம், யானை வாகனம் |
| 31-07-2026 | வெள்ளி | --- | திருத்தேர் |
| 01-08-2026 | சனி | --- | குதிரை வாகனம் |
| 02-08-2026 | ஞாயிறு | சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-06-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

